விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 287 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 15 திங்கட்கிழமை (02.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வாகன விபத்தில் இளைஞன் பலி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோம்பாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில்7ஆம் 15

### நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல்

## கிளிநொச்சியில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலைக் கண்டித்து இன்று கிளிநொச்சியில் பாரிய ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கான அழைப்பை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த ஊடக அறிக்கையில், முல்லைத்தீவு 15

### மேலும் ஐந்தாண்டுகள்

# ரணில் ஜனாதிபதியாக பதவி வகிக்க வேண்டும்

### இல்லையேல் மீண்டும் நெருக்கடி ஏற்படும் இராஜாங்க அமைச்சர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டின் ஜனாதிபதியாக தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்க வேண்டும். இல்லையேல் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என இராஜாங்க அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர்.**

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கூடி ஆராய்ந்த இராஜாங்க அமைச்சர்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்க வேண்டும்.

இதற்காக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் 15



## எரிபொருள் விலைகள் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில், சிபெட்கோ நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் விலை 4 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 365 ரூபாயாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் விலை 3 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 15

## லிட்ரோ எரிவாயு விலை மீண்டும் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

இந்த மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தம் எதிர்வரும் 4ஆம் திகதி அறிவிக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

உலக சந்தையில் பதிவாகியுள்ள எரிவாயு விலைக்கு ஏற்ப இந்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி, எரிவாயுவின் விலையில் சிறிது அதிகரிப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 15

## தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகளுக்கு குடியுரிமை

### முதல்வரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

(சென்னை)

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு புகலிடம் தேடிச் சென்ற ஈழத் தமிழ் மக்களின் நலன்கள்மற்றும் அவர்களுக்கு குடியுரிமை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய இடைக்கால அறிக்கையொன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவின் 15

## திருமலையில் விகாரை அமைப்பு எதிர்த்துப் போராட நீதிமன்றம் மறுப்பு

(திருகோணமலை)

திருகோணமலை பௌத்த விகாரை கட்டுமானங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட விருந்த போராட்டங்களுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

திருகோணமலை இலுப்பைக்குளத்தில் தடைசெய்யப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுவரும் பௌத்த விகாரை ஒன்றின் கட்டு மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்படவிருந்தது.

குறித்த போராட்டத்திற்கு தடை விதிக்குமாறு நிலாவெளி பொலிஸாரினால் வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய நீதிமன்ற தடை உத்தரவின் பேரில் குறித்த போராட்டம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாகபொரலு கந்தரஜமகா விகாரை 15

## ஜனாதிபதித் தேர்தலுக்கு 11 பில்.நிதியொதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நிலையில், அடுத்த ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் 11 பில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அரசியலமைப்புச் சட்டப்படி, அடுத்த ஆண்டு கட்டாயம் தேர்தலை நடத்த வேண்டிய சூழல் அரசாங்கத்துக்கு உள்ளதால் 11 பில்லியன் ரூபாயை தேர் 15

## மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் பலி

### சாவகச்சேரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற் குட் பட்ட நுணாவில் பகுதியை 15

## நீதிபதிக்கு அழுத்தங்களில்லை என எவரும் கூறமுடியாது

### எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நீதிபதிக்கு அழுத்தங்கள் இல்லை என்று எவரும் சொல்லமுடியாது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு அழுத்தங்கள் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 2023, 2024 மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருத்த வேலைகளுக்கான

## கேள்வி கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. தனித்தனி கேள்வி பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. வசந்த மண்டபமும் இணைந்த அறை திருத்தம் செய்தல்
02. உட்களஞ்சிய அறை, பாகசாலை திருத்தம்
03. ஆலய கதவுகள் திருத்தம்
04. வடிகால் திருத்தம்
05. CC TV Camara பொருத்துதல், திருத்தம் செய்தல்
06. மின்இணைப்பு வேலை - சீர்செய்தல்
07. சுற்றுபுற வீதிக்கான நீர்குழாய் இணைத்தல்
08. சுவாமி எழுந்தருளும் வாகனங்கள் திருத்தம்
09. நீர்வேலி வாழைத்தோட்ட காணிக்கான களஞ்சிய அறை, நுழைவாசல் கதவு அமைத்தல்

இவ்வேலைகளுக்கான கேள்வி கோரல்கள் படிவத்தினை 2023.10.02ஆம் திகதியிலிருந்து ஆலய நிர்வாக சபை காரியாலயத்தில் 1000/= செலுத்தி பெற்றுக்கொண்டு கேள்விப்பத்திரம் பூரணப்படுத்தி 2023.10.09 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி "செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவுஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் திருத்த வேலைகளுக்கான கேள்வி கோரல் என குறிப்பிட வேண்டும். அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி கோரல் பெட்டியில் இடப்படவேண்டும்.

கிடைக்கப்பெறும் கேள்வி கோரல்கள் 2023.10.08 ஆம் திகதி பிற்பகல் 2.10 மணிக்கு திறக்கப்படும். 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்படும் எந்த கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி பத்திரம் அனுப்புவோர் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது. அத்துடன் குறிப்பிட்ட கேள்விகளின் மொத்ததொகை எல்லோருக்கும் வாசித்து காட்டப்படும்.

ஆலய அறங்காவலர் சபை யாருக்கு கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதுவே இறுதி தீர்மானமாக அமையும். கேள்விபத்திரம் அனுப்புவோர் ஏற்கனவே ஆலயங்களில் வேலை செய்த அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

ப.க.பரமலிங்கம்
தலைவர்,
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

(C-7357)


# நந்திக்கடலில் மூழ்கி இளைஞன் பலி

(முல்லைத்தீவு) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்குட்பட்ட நந்திக் கடல் பகுதியில் நீரில் மூழ்கிய இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் மந்துவில் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய தர்மராசா நிசாந்தன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சடலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளினை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-299)


## Romania வேலைவாய்ப்பு விசா


Romania நாட்டில் Electrician மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புகள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

Hybrid International hub (pvt) Ltd, Jaffna
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)
(C-7352)

021 222 1265,076 250 0098

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


## 18ஆம் ஆண்டு நினைவுதினம்



அமரர்

### பொன்னுத்துரை நாகேந்திரம்

திதி : 2023.10.02

உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

தோற்றம் 1931.04.06 மறைவு 2005.09.21

தகவல் : குடும்பத்தினர்

(17310)


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## Jaffna Education YouTube Channel நடாத்திய

# மாபெரும் கருத்தரங்கு - 2023

**Jaffna Education YouTube Channel and Exam Centre** 28.09.2023 அன்று **யாழ்ப்பாணம்** தந்தை செல்வா கலையரங்கில் நடாத்திய மாபெரும் கருத்தரங்கில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர்.







**பரீட்சையும் வழிகாட்டலும்** என இரண்டு பிரிவுகளாக நடாத்தப்பட்ட வழிகாட்டல் கருத்தரங்கில் அதிகூடிய புள்ளிகள் (90 இற்கு மேல்) பெற்ற நான்கு மாணவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா (10,000/=) பணப்பரிசு வழங்கப்பட்டது.

1) செ.ராதா - யா/துன்னாலை மெ.மி.த.க பாடசாலை (93 புள்ளிகள்)
2) வி.பவிஷன் - யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை (93 புள்ளிகள்)
3) ச.வருண் - யா/சென்.யோண் பொஸ்கோ வித்தியாலயம் (90 புள்ளிகள்)
4) பி.சோபிதன் - யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை (90 புள்ளிகள்)








மேலும் 85 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 8 மாணவர்களுக்கு தலா ரூபா.5000/= பணப்பரிசு 15 மாணவர்களுக்கு தலா 1000/= ரூபா பணப்பரிசும் 20 மாணவர்களுக்கு தலா ரூபா 500/= பணப்பரிசும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆசிரியர்கள் வளவாளர்களாக கலந்து கொண்ட இக் கருத்தரங்கு மிகப் பயனுள்ள வகையில் அமைந்திருந்ததாக பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தமது பாராட்டுக்களை தெரிவித்துச் சென்றனர்.



அனைத்து மாணவர்களும் இறுதிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறுவதற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இறுதிப்பரீட்சையில் அதிகூடிய புள்ளியினை பெறும் மாணவருக்கு ரூபா 100,000/= (ஒரு இலட்சம்) பணப்பரிசும் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர்
Jaffna Education YouTube Channel
& Exam Centre

கடினமான பயிற்சி ; இலகுவான பரீட்சை

(17307)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிக்கே அச்சுறுத்தல் உள்ள நாட்டில்

# எமக்கு நீதி கிடைப்பது எப்போது?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

**(முல்லைத்தீவு)**

**நீதிபதிக்கே உயிர் அச்சுறுத்தல் உள்ள நாட்டில் எமக்கான நீதி எப்போது? என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வி எழுப்பினர்.**






சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முல்லைத் தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் அவர்களது போராட்ட இடத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிபதிக்கே உயிரச் சுறுத்தல் உள்ள நாட்டில் எமக்கு நீதி எப்போது?, சர்வதேசமே எமக்காக குரல் கொடுக்க எழுந்திரு, கையளிக்கப்பட்ட மாண வர்கள் எங்கே?, 'குடும்பமாக ஒப்ப டைக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே?', தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?, சின்னஞ் சிறு சிறார்களும் ஆயுதம் ஏந்தியவர்களா?, பாடசாலை சென்ற மாணவன் எங்கே? போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர். இலங்கையில் காணாமல் போன தமிழ் சிறுவர் மற்றும் குழந்தை களின் ஒளிப்படங்களையும் இதன்போது கைகளில் ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தில் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொது மக்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-299)

# பௌத்த மேலாதிக்கத்தினால் நீதித்துறைக்கு களங்கம்

## கட்டுப்படுத்தத் தவறின் விளைவு மோசமாகும்

## முன்னாள் நீதியரசர் எச்சரிக்கை



(கொழும்பு)

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினால் நீதித்துறைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள களங்கத்தை, அரசாங்கம் கட்டுப்படுத்த தவறின், மோசமான பின்விளைவு களை சந்திக்க நேரிடும் என முன்னாள் நீதியரசரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துளளார்.

நீதித்துறையை சுயாதீனமாகச் செயற்பட வைக்கும் கடமை இலங்கை அரசாங்கத்திற்கு காணப்படுவதாகவும், நீதிபதி விவகாரத்தில் முறையான விசாரணை முன்னெடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (நி)

# வழங்கிய தீர்ப்பிற்காக கொலை மிரட்டலா? வெளிப்படையான விசாரணை வேண்டும்

## அநுரகுமார கோரிக்கை



(கொழும்பு)

முல்லைத்தீவு நீதிபதி விவகாரம் குறித்து உண்மையை கண்டுபிடிப்பதற்கான வெளிப்படையான **விசாரணை இடம் பெற** வேண்டும் என தேசிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொலநறுவையில் இடம்பெற்ற, கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கட்சியின் தலைவர் அநுர குமார திசநாயக்க இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மரணஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அதன் **காரணமாகவே தான்** நாட்டை விட்டு வெளியேறியதாகவும் நீதிபதி தெரிவித்திருப்பது உண்மை என்றால் அது பாரதூரமான நிலைமை.

நீதிபதி தெரிவித்திருப்பது உண்மையில்லை என்றால் அதன் பின்னால் உள்ள சதி முயற்சியை கண்டறிவதற்கு விசாரணை இடம்பெற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சீரற்ற காலநிலையால் 5,051 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஆயிரத்து 275 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 316 வீடுகளும் 4 வர்த்தக நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலையினால் இரத்தினபுரி, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜேர்மனிக்கு பயணித்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.

ஜேர்மனியின் பேர்ளினில் நகரில் நடைபெற்ற பேர்ளின் குளோபல் டயலொக்கில் கலந்து கொள்வதற்காக கடந்த 27 ஆம் திகதி காலை ஜனாதிபதி ஜேர்மன் பயணித்திருந்தார்.

தற்போதைய புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் உலக அளவில் உயர்மட்ட முயற்சியான 'பெர்லின் குளோபல்' மாநாடு கடந்த 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதில்கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 27 ஆம் திகதி அதிகாலை ஜேர்மனிக்கு பயணித்திருந்த நிலையில் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# தயிர் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தயிர்ச்சட்டி ஒன்றின் விலை 500 ரூபா வரை அதிகரித்துள்ளதாக தேசிய வாடிக்கையாளர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது உற்பத்தி செய்யப்படும் பாலின் விலை குறைவடைந்துள்ளதாலேயே தயிர்ச்சட்டியின் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், உலகில் அதிகளவில் பால் மாவை பயன்படுத் தும் ஐந்து நாடுகளில் இலங்கை யும் உள்ளடங்குவதாக ஆய்வு கள் கூறுகின்றன.

இதேவேளை இலங்கை க்கு தேவையான பாலில் 40 வீதம் மாத்திரமே உள்நாட்டிலி ருந்து பெறப்படுவதோடு மீதமு ள்ள 60 வீதமானது வெளிநாடு களிலிருந்து இறக்குமதிசெய்ய ப்படுவதாக அண்மையில் கால் நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பீ. ஹேரத் தெரிவி த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலையில் முடிந்த தர்மமுழக்கபோர்

தர்மமுழக்கம் என் அழைக்கப்படும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணிக்கும் கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்ட தொடரின் 6 ஆவது தர்மமுழக்கம் சமநிலையில் நிறைவுற்றது.

நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டத்தில் முழங்காவில் மகா வித்தியாலயம் 65.03 பந்து பரிமாற்றங்களில் 195 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்த நிலையில் நேற்று இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த தருமபுரம் மத்திய கல்லூரி அணி 34.01 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 142 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த முழங்காவில் மகா வித்தியாலய அணி 33.03 பந்து பரிமாற்றங்களில் 83 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

தொடர்ந்து 137 ஓட்டங்களை 13 பந்து பரிமாற்றங்களில் பெற வேண்டும் என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய தருமபுரம் மத்திய கல்லூரி அணி 13பந்து பரிமாற்றங்களில் 44 ஓட்டங்களுக்கு 2இலக்குகளை இழந்த நிலையில் போட்டி நடுவர்களால் சமநிலைக்கு கொண்டுவரப்பட்டது.



குறித்த தொடரில் ஆட்ட நாயகனாக -தருமபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் யு.டினோராஜ் சிறந்த துடுப்பாட்ட வீரராக தருமபுரம் மத்திய கல்லூரி வீரர் கே.றொபின்சன் சிறந்த களத்தடுப்பாளராக முழங்காவில் மகா வித்தியாலய அணி வீரர் எஸ்-டிசாந்தன் சகலதுறை வீரராக -முழங்காவில் மகா வித்தியாலய அணி வீரர் வி.யதுசன் சிறந்த பந்து வீச்சாளராக தருமபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் யு-டினோராஜ் தெரிவுசெய்யப்பட்டார்(நி-6-316)

# டெண்டுல்கரின் சாதனையை முறியடிப்பாரா விராட்கோலி?



எதிர்வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி தொடரில் சச்சினின் சாதனையை இந்திய கிரிக்கெட் வீரர் விராட்கோலி முறியடிக்க வாய்ப்புக்கள் உள்ளதாக கருதப்படுகிறது.

இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை 2023 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற உள்ளது.

இதில் இந்தியா, அவுஸ்திரேலியா, நடப்பு சம்பியனான இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, வங்கதேசம், பாகிஸ்தான், நெதர்லாந்து, இலங்கை, மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 10 அணிகள் பலப்பரீட்சை செய்யவுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் உலகக் கோப்பை தொடரில் வெறும் 20 ஓட்டங்கள் சேர்த்தால் ஐ.சி.சி தொடர்களில் அதிக ஓட்டங்களை குவித்த இந்திய வீரர் என்ற சச்சினின் சாதனையை இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி முறியடிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சச்சின் ஐ.சி.சி தொடர்களில் மொத்தமாக இதுவரை 2,719 ஓட்டங்கள் குவித்துள்ளார். தற்போது விராட் கோலி 2,700 ஓட்டங்கள் வரை குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2928

சிவர்சன்




மதுமிதா




சதீஸ்




வாகிஷா




மதுசன்




தனுயன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் போசாக்கின்மையால் மூவாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் பாதிப்பு

## மாவட்ட செயலகம் தகவல்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மூவாயிரத்துக்கும் அதிகளவான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொருட்களின் விலை ஏற்றம், தொழில் வாய்ப்பின்மை,வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை உள்ளிட்ட காரணங்களால் 568 இற்கும் மேற்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும் 2765 இற்கு மேற்பட்ட 16 வயதுக்குட்பட்ட சிறுவர் களும் இவ்வாறு போசாக்கு குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 1288 சிறுவர்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 884 சிறுவர்களும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 768 சிறுவர்களும் பச் சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 393 சிறுவர்களும் இவ்வாறு போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தின் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. (நி-6-315)

# ஒக்டோபர் மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தம் இன்று

(கொழும்பு)

ஒக்டோபர் மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தம் இன்று மேற்கொள்ளப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

விலை சூத்திரத்தின்படி, ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், இந்த மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தம் இன்று அறிவிக்கப்பட்டு அதன் பின்னர் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விலை சூத்திரத்தின்படி, கடந்த மாதம் எரிபொருள் விலையில் அதிகரிப்பு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தம்பலகாமம் வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையில் தீ

(திருமலை)

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச வைத்திய சாலையின் மருந்து களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீயினால் களஞ்சியசாலை முற்றாக சேதமடைந்துள்ளது.

நேற்றுக் காலை மருந்து களஞ்சியசாலையில் பரவிய தீ தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின் ஒழுக்கினால் தீ பரவியிருக்கலாமென சந்தேகிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (நி)

# போரில் சரணடைந்த சிறுவர்களுக்கு நீதிகோரி கிளிநொச்சியில் போராட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போரின் இறுதிக் கட்டத்தில்சரணடைந்த சிறுவர்களுக்கு நீதிகோரி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கடந்த 2474 நாட்களாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்கள் சர்வதேச சிறுவர் தினமான நேற்று குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

போரின் இறுதி கட்டத்தில் சரணடைந்த சிறுவர்களுக்கு நீதி கோரியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் இப்போராட்டமானது கிளிநொச்சியில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்களின் அலுவலகத்தின் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.(நி-6-315)

# பௌத்தம் சிங்களவருக்கு மட்டும் சொந்தமானதல்ல-வல்பொலதேரர்

(கொழும்பு)

பௌத்தம் என்பது சிங்கள-பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது முழு உலகிற்கும் சொந்தமானது. பௌத்த தர்ம வளர்ச்சிக்கு தமிழ் பௌத்தர்கள், தமிழ் சங்க காலம் தொட்டு பாரிய பங்களிப்புகளை வழங்கி உள்ளார்கள். அதையிட்டு நாம் பெருமை அடைய வேண்டும் என கொழும்பு பாமன்கடை ஸ்ரீமகாவிஹாரையின் பிரதம தேரர் கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தெரிவித்தார்.

கணிசமான பண்டைய தமிழ் சங்ககால அங்கத்தவர்கள் இவ்வுலகில் பௌத்தத்துக்கு பெரும் பங்களிப்புகள் வழங்கி உள்ளார்கள். முதலாவது வண. புத்தகோஷ மகாதேரர் மற்றும் வண.அனுருத்த மகாதேரர் ஆகியோர் அபிதர்ம காவியத்தை எழுதினார்கள்.

அமெரிக்காவிலும் ஆனந்த குமாரசுவாமியே ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பௌத்த கல்வியை 1930 களில் போதிக்க ஆரம்பித்தார். ஆகவே பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது உலகத்துக்குச் சொந்தமானது. பண்டைய காலங்களில் தமிழ் சங்ககால அங்கத்தவர்களே பௌத்தத்தை வளர்த்து எடுத்தார்கள். இதை நாம் பெருமையுடன் கூறி வைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

02.10.2023
புரட்டாதி 15, திங்கட்கிழமை
திருதியை முற்பகல் 11.27 மணிவரை

பரணி முன்னிரவு11.01 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம்7.32-9.02 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்,மகாபரணி

சந்திராஷ்டமம்- உத்தரம் ,அத்தம்.

வளவன்

**மேஷம்** – சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், வேலைச் சுமை கூடும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** – வருமானம் எதிர்பார்த்தபடியே வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** – கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** – மறைமுகப் போட்டிகள் அகன்று தொழில் விருத்தி ஏற்படும், விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** – கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்** – பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** – சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** – புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், உறவினர்கள் வழியே அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்

**மகரம்** – உறவினர் நண்பர்கள் வழியே ஒத்துழைப்புகள் கிடைக்கும் வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


**கும்பம்** – எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மீனம்** – பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

நன்மையும் விவேகமும் கலந்தது நகைச்சுவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய ஏழாம் திருவிழாவான கப்பல் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. பகல் திருவிழாவினைத் தொடர்ந்து இரவு விஷேட மேளக்கச்சேரிகள் இடம்பெற்று அதிகாலை வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் போது வடக்கு வீதியில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கப்பலாட்டும் வைபவம் இடம்பெற்றது. (படங்கள்- சிவசாந்தன்.மகாலிங்கம்)

# யாழில் தாச்சி சுற்றுப் போட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அழிந்து வரும் தமிழர்களின் மரபுவழி பாரம்பரிய விளையாட்டை மக்களிடத்தில் கொண்டு செல்லும் நோக்குடன் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறை இணைந்து நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் அணிகளுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட ரீதியில் நடைபெறும் இவ் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டியில் 30 அணிகள் பங்குபற்றுகின்றன. மேலும் தாச்சிப் போட்டி இன்று மாலை 7 மணிக்கு தாவடி காளி அம்மன் விளையாட்டு மைதானத்தில் இச்சுற்றுப்போட்டி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

தமிழர்களின் பாரம்பரியத்தினை எடுத்தியம்பும் இச்சுற்றுப்போட்டிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் லண்டன்வாழ் ஈழத்தமிழருமாகிய குருபரன் நிதி அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# இலவச சித்திர சிற்ப வகுப்புக்கள்

(சாவகச்சேரி)

கச்சாய் பொதுநூலகத்தில் இலவச சித்திர மற்றும் சிற்ப வகுப்புகள் நடைபெறுவதாக நூலகர் அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கச்சாய் பொதுநூலகத்தில் நடைபெற்ற நூலக ஆலோசனைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 10-12 வரை இலவச சித்திர மற்றும் சிற்ப வகுப்புக்கள் நடைபெறுகிறது.

குறித்த வகுப்புக்களில் ஆர்வமுள்ள எவரும் பங்குபற்றி பயன் பெறலாம் எனவும் நூலகர் அறிவித்துள்ளார்.(5-6-30)

# விபத்து இடம்பெறுவதை தடுக்க வீதிச் சமிக்ஞைகளை பொருத்துங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

மருதனார் மட சந்தியில் இடம்பெறும் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு அப்பகுதியில் வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்துமாறு பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் நான்கு சந்திகள் ஊடாக வாகனங்கள் பயணிக்கும் வேளையில் விபத்துக்கள் இடம்பெறும் வாய்ப்புக்கள் உள்ளன.

மேலும் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி ஒருவரும் அவரின் தாயாரும் காயத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து குறித்த பகுதியில் வீதிச் சமிக்ஞையை பொருத்தி தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-60)

# சர்வதேச அகிம்சை தினம்- ஒக்டோபர் 02

இன்று சர்வதேச அகிம்சை தினம். மகாத்மா காந்தி பிறந்த தினமான ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அகிம்சை தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இத் தினத்தை அனுட்டிப்பதன் நோக்கம் உலக நாடுகளில் அகிம்சை, உண்மை, அமைதி, சகிப்புத் தன்மை, ஆயுதக் களைப்பு என்பனவற்றுடன் சமத்துவம், சமூகத்தின் இன, மொழி, சமய ஒற்றுமை, இரக்கம் மனிதாபிமானம் என்பனவற்றை மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும்.

அகிம்சை தினமாக மகாத்மா காந்தியின் (02.10.1869-30.01.1948) பிறந்தநாளை தெரிவு செய்யப்பட்டமைக்கு பிரதான காரணமாக அகிம்சையில் அவர் கொண்டுள்ள அசையாத நம்பிக்கையாகும். அவர் இந்திய சுதந்திரத்திற்காக தன்னை முற்றாக அர்ப்பணித்தவர். இதற்காக ஆயுதமின்றிய மக்களை ஒன்று திரட்டி அகிம்சையை அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஆயுதமாக பயன்படுத்த போராடி இறுதியில் வெற்றி கண்டவர்.

தென்னாபிரிக்காவில் இந்திய மக்களுக்கு வெள்ளையர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் மோகன்தாஸ் காந்தி அகிம்சை வழியிலேயே போராடி அவர்களின் உரிமைகளை பெறுவதற்கு உதவினார். அங்கேயும் பல்வேறு இன்னல்களையும் அவமதிப்புக்களையும் தாங்கி தனது இலக்குகளை அடைந்தார்.

காந்தியடிகளின் செயற்பாடுகளை புகழ்ந்தும் வாழ்த்தியும் சிலர் விமர்சித்துமுள்ளனர். இந்தியர் மட்டுமல்லாது உலகின் பல பாகங்களிலுமிருந்தும் அவர் வாழும் போதும் மறைந்த பின்பும் அவரது



கருத்துக்கள், செயற்பாடுகள், திட்டங்களை பின்பற்றுகின்றனர். அகிம்சை "இமாலயத்தைவிடப் பெரியது" வன்முறையால் சாதிக்க முடியாத விடயங்களை அகிம்சை முறையில் சாதிக்க முடியும். இந்திய விடுதலைப் போராட்டத்தை இதற்கு சிறந்த உதாரணமாக எடுத்துக் கூற முடியும். அகிம்சை வழிப்போராட்டத்திற்கு தலைமை தாங்குபவர் தன்னலமற்ற, நேர்மையான, உண்மையையே உரைப்பவராகவும் அகிம்சையின் அடிப்படை கூறுகளை விளங்கியவராகவுமிருக்க வேண்டும்.

உலகிலேயே அதிக எண்ணிக்கையான சிலைகள் மகாத்மா காந்தியிற்கே நிறுவப்பட்டுள்ளன. அதிக எண்ணிக்கையான மகாத்மாவினுடைய வரலாற்று நூல்கள், காந்தியக் கொள்கை விளக்கங்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், கவிதைகள் என்பன இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகளில் பல்வேறு மொழிகளிலும் வெளிவந்துள்ளன. இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. காந்தியடிகளை உலகில் உயர்ந்தோர் என போற்றப்படும் தத்துவஞானி கள், அரசியல் தலைவர்கள், இலக்கியவாதிகள், விஞ்ஞானிகள் என பல தரப்பினரும் புகழ்ந்தும் வாழ்த்தியும் உள்ளனர்.

காந்தியடிகளுடன் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இணைந்து செயற்பட்டவர் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவர்கலால் நேரு அவர்கள். அவர் காந்தியடிகளை பற்றிக் கூறும் போது "மேன்மையான, தூய்மையான, துணிச்சலான, வலிமையான ஆன்மா பூமியில் முன் ஒருபோதும் உலாவிய தில்லை, அவர் மனிதரினுள் மனிதனாக, தலைவர்களினுள் தலைவனாக, தேசபக்தனினுள் தேசபக்தனாகவும் விளங்குகின்றார்.

இந்திய மக்கள் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்து இன்று உயர்ந்த நிலையை பயணிப்பதற்கு உழைத்தவர் மகாத்மா காந்தி என்று நன்றாகக் கூறமுடியும்" என்றார். இந்திய சுதந்திரத்திற்கு மட்டுமல்லாது பொருளாதார முன்னேற்றம், வறுமை நீக்கம் உட்பட 18 நிர்மாணத் திட்டங்களை வகுத்து வழங்கி அவற்றைத் திறமையாக செயற் படுத்த பாரத நாட்டின் உயர்வுக்கும், உலக மக்களின் அடிமை வாழ்வு வாழ்ந்தவர்களுக்கு ஒரு விடிவெள்ளியாக விளங்கினார்.

இவ்வளவு சிறப்புக்களை கொண்ட மகாத்மா காந்தியின் பிறந்த நாளான ஒக்டோபர் 02 ஆம் திகதியை சர்வதேசம் தெரிவு செய்தமை மிகவும் பொருத்தமானதே.

இந்த நன்னாளில் நாமும் காந்தியடிகளின் சிந்தனைகளைப் பின்பற்றி வன்முறையற்ற உண்மையான, நீதியான உயர்ந்த சிந்தனைகளை கொண்ட அகிம்சை வழி சமுதாயத்தை உருவாக்குவதற்கு எமது பங்களிப்பை செய்வோமாக.

செ.சர்வகா, ஆசிரியர்,
கிளி/ முக்கொம்பன் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் விரக்தியின் விளிம்பில் இலங்கை மக்கள்

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

**இலங்கை மக்களின் வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினால், நாட்டு மக்கள் மத்தியில் கடுமையான சமூக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டுள்ள "2023 - செப்டெம்பர் - பொது நிர்வாக பகுப்பாய்வு மதிப்பீட்டு அறிக்கை"யில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தை மட்டுப்படுத்துதல், நாணய மாற்று விகிதங்களை ஸ்திரப்படுத்துதல், இலங்கை மத்திய வங்கியின் இருப்புகளை மீள கட்டியெழுப்புதல் ஆகியவற்றுடன் பொருளாதார ஸ்திரப்படுத்தலில் தற்காலிக முன்னேற்றங்கள் இருந்த போதிலும், இந்த நிலை உருவாகியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தித்துறையில் வரித் திருத்தங்கள், செலவை ஈடு செய்வதற்காக முன்வைக்கப்பட்ட விலை நிர்ணயம், நிலுவைத் தொகை நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்பன வாழ்க்கைச் செலவை உயர்த்தியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் தொடர்ச்சியான தட்டுப்பாடு, போராட்டக்காரர்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை என்பன பொதுமக்களின் அதிருப்திக்கு வழிவகுத்துள்ளது.

ஊழலைக் குறைப்பதில் தெளிவான முன்னேற்றம் இல்லாமையும் பொதுமக்களிடையே அதிருப்தி ஏற்பட முக்கிய காரணமாகும்.

கடந்த கால முறைகேடுகளுக்கு காரணமான அதிகாரிகள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்காமல், தத்தமது பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றமையும் பொது மக்கள் கவனம் செலுத்தியுள்ள விடயமாக அமைந்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட பலவீனமான பொறுப்புக் கூறல் நிறுவனங்களால் ஊழல் அபாயங்கள் உக்கிரமடைந்துள்ளதாகவும் இதனால் இந்த நிறுவனங்களுக்கு தங்களது பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் அதிகாரமோ, தகுதியோ இல்லை எனவும் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தவறான நடத்தையைக் கொண்ட அதிகாரிகளை தண்டிக்காததால், பொது நிர்வாகத்துறை மீதான நம்பிக்கை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரச கொள்முதல் நடவடிக்கைகளில் ஊழல் இடம் பெறும் அபாயம் காணப்படுகின்றமை, கொள்முதல் செயற்பாடுகளுக்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதில் அதிக அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன பொது மக்களின் விரக்திக்கான காரணங்களாக அமைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)



யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நிறுவப்பட்டு நூறு வருடங்கள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் கல்லூரித்தின விழா நேற்று அதன் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன், கஜிந்தன்)

## அதிக மின் கட்டணம் செலுத்துவதில் இலங்கை சாதனை

(கொழும்பு)

உத்தேச மின்சாரக் கட்டண அதிகரிப்பு இடம் பெற்றால், தெற்காசியாவிலேயே அதிக மின்சாரக் கட்டணம் செலுத்தும் நாடாக இலங்கை மாறும் என எரிசக்தி நிபுணர் திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் அதிக மின்சார கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளதாக தெரிவித்தார்.

மின்சார உற்பத்திப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு புதிய முறையொன்று அவசரமாக அறிமுகப் படுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டார். (நி)

## அரசின் கபடத்தனமான காய்நகர்த்தல் ஆச்சரியமானதல்ல - செந்தில்வேல்

(அராலி)

இலங்கையில் ஏற்கனவே ஜனநாயகமும் சட்ட ஆட்சியும் பக்கச் சார்பாக இருந்து வரும் அரசியல் சூழலில் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதிக்கு நேர்ந்துள்ள கதி ஆச்சரியம் தரும் ஒன்றல்ல என புதிய ஜனநாயக மார்க்சிஸ லெனினிச கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அச்சுறுத்தல் மற்றும் நிர்ப்பந்தம் காரணமாக பதவி விலகியது தொடர்பில் அக்கட்சி நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களுக்கும் ஏனைய சிறுபான்மையினருக்கும் ஜனநாயகமும் சட்ட ஆட்சியும் நீதியும் மறுக்கப்பட்டவையாகவே இருந்து வந்துள்ளன.

அத்தகைய சம்பவங்கள் அவ்வப்போது இடம்பெற்று வந்துள்ள போதும் அவற்றின் ஒரு உச்ச நிகழ்வாகவே முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் மீதான அச்சுறுத்தலும் பதவி விலகலும் நாட்டைவிட்டுச் சென்ற நிகழ்வும் இடம்பெற்றிருக்கின்றன.

இச்சம்பவத்தில் வழமை போன்று அடுத்து அதிகாரத்திற்கு வருவதற்கான காய்களைநகர்த்தும் ஆட்சி அதிகார சக்திகளின் சிங்கள -பௌத்த பேரினவாத அரசியல் கரங்கள் இருப்பதை மறைத்து விட முடியாது.

அதேவேளை இன, மத மோதல்களைத் தூண்டி, அவற்றின் ஊடாக இலங்கையில் தத்தமது வல்லரசு மேலாதிக்கங்களை நிலைநிறுத்த திரைமறைவில் இருந்து செயற்பட்டு வரும் அந்நிய உளவு நிறுவனங்கள் பற்றியும் அவற்றினால் வழிகாட்டப்படும் இனமதக் குழுக்கள் பற்றியும் மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியம் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-104)


மணிவிழா வாழ்த்து



திரு.அம்பலவாணர் சொர்ணலிங்கம்

Tra(primary), G.S.Q, BEd, SLTS-I

சேவை விபரம்

யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்
25.03.1990-15.01.1997
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
16.01.1997-31.12.2001
யா/புதுமடம் றோ.க.த.க. பாடசாலை
01.01.2001-06.02.2008
யா/மல்வத்தை றோ.க.த.க பாடசாலை
07.02.2008-31.12.2015
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்
01.01.2016-18.03.2018
யா/இணுவில் மத்திய கல்லூரி
19.03.2018-10.01.2021
யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை
11.01.2021-02.10.2023 (17298)

வாழ்த்துவோர்- யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 208

### உயர்பதவியில் இருந்தும் எளிமையான வாழ்க்கை

நிகழ்ச்சியோ பொதுகூட்டமோ நடந்தால் மக்களோ தொண்டர்களோ. காலணா அரையணா, ஒரு அணா என்று கொடுப்பார்கள். அதை வாங்கி பையில் போட்டுக் கொள்வர் காமராஜர்.

சென்னை வந்ததும் பார்ப்பார். ஐந்து ரூபாய், எட்டு ரூபாய் என்று சேர்ந்திருக்கும். அப்படியே கொண்டு போய் தன் நண்பரான 'இந்து' பத்திரிகை முதலாளி கஸ்தூரி ரங்கனிடம் கொடுத்து விடுவார். நீண்ட காலம் அப்படி நீடித்தது.

ஒரு முறை 'இந்து' கஸ்தூரிரங்கன் அவர்களுக்கு உடல் நிலை மோசமாகி விட்டது. பிழைப்போமா என்பதில் அவருக்கே சந்தேகம். காமராஜரை அழைத்தார்.

"சாகும்போது கடன்காரனாக சாக விரும்பவில்லை. உம் பணத்தை உம்மிடமே ஒப்படைத்து விடத்தான் அழைத்தேன்" என்றார் பெருந்தலைவர் காமராஜருக்கு கண் கலங்கிப்போனது. 'அப்படி ஏதும் நடக்காது. நீங்கள் நல்லபடியாக எழுந்து நிற்பீர்கள். கவலைப்பட வேண்டாம்.

இந்த பணத்திற்காகதான் வரச் சொன்னீர் எனத் தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்" என்றார் .

சரி எத்தனை வருடம் எவ்வளவு தொகையை கொடுத்துவந்தீர் என்பதாவது ஞாபகம் இருக்கா? அல்லது கணக்கு வைத்துள்ளீரா? என்றார்.

அதெல்லாம் எனக்கு தெரியாது என்றார் காமராஜர்.

வீட்டில் உள்ளவர்களை அந்த நோட்டுபுத்தகத்தை எடுத்து வரச் சொன்னார் கஸ்தூரிரங்கன். திகதி வாரியாக எழுதி வைத்திருந்ததை காட்டி, இத்தனை ஆண்டுகள் இவ்வளவு தொகை இருக்கிறது என்று கூறியதோடு. 'எனக்கு ஏதாவது ஒன்று நடந்து விட்டால் பணத்தை காமராஜரிடம் ஒப்படைத்து விடுங்கள்' என்றும் வீட்டில் உள்ளவர்களிடம் கூறினார்.

பிறகு காமராஜர் நினைப்பை போலவே கஸ்தூரிரங்கன் குணமாகி நல்லபடியாக எழுந்தார். வழக்கம் போலவே ஒரு முறை இருவரும் சந்தித்து பேசிக் கொண்டிருந் தார்கள்.

அப்போது 'ஒரு நல்ல தொகை இருக்கிறது. வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது செய்து கொள்ளுங்கள்' என்றார் கஸ்தூரி ரங்கன். பதிலளித்த பெருந்தலைவர் 'அந்த பணத்தை வைத்து கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். சாப்பிடறது இண்டு இட்லி. அது எப்படியாவது எனக்கு கிடைச்சுடும். எனக்கெதற்கு பணம்' என்று யோசித்தவர் 'ஒன்று செய்யுங்கள். உங்கள் கையாலேயே ஒரு இடத்தை வாங்கிகொடுங்கள்" என்றார்.

கஸ்தூரிரங்கனுக்கு மகிழ்ச்சி. இடத்தையாவது கேட்டாரே என்று. அலைந்து பிடித்து ஒரு பெரிய நிலத்தை பார்த்தார். விலை பேசினார். காமராஜர் கொடுத்து வைத்திருந்ததை விட கூடுதல் விலை. அந்த கூடுதல் பணத்தை கஸ்தூரிரங்கனே போட்டு நிலத்தை பேசி முடித்தார்.

பத்திரபதிவுக்கு பெருந்தலைவரை அழைத்தார். யார் பெயரில் என்று கேட்கிறார். உம் பெயரில்தான் என்ற பதிலை கேட்டு அலறிய காமராஜர் 'எனக்கு எதற்கு காசு பணம், சொத்து எல்லாம். நானா சம்பாதிச்சேன். மக்கள் கொடுத்த காசு. என் பெயரில் வேண்டாம் என்கிறார். எவ்வளவு கூறியும் கேட்கவில்லை. கடைசியில் காமராஜர் சொன்னபடியே கட்சியின் பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

அந்த இடம்தான் இன்று அண்ணா சாலையில் உள்ள 'தேனாம் பேட்டை காங்கிரஸ் கட்சி மைதானமும், பெரிய காமராஜர் அரங்கமும்". கோடி கோடியான மதிப்பில் சொத்து. யார் யாரோ, எப்படியெல்லாமோ அனுபவிக் கிறார்கள். அந்த பெருந்தலைவர் இறந்த போது கூட அவர் வாங்கிய இடத்தில் அடக்கம் செய்யப்படவில்லை. கிண்டியில் பொது இடத்தில், பொதுசொத்தாகவே அடக்கம் செய்யப்பட்டார்.

# கடல் வழியாக ஐரோ...
# பயணிப்போரில் இதுவ...




(ஜெனீவா)

**மத்தியதரைக் கடலின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு... முயற்சியில் இவ்வாண்டில் இதுவரையில் 2,500 இ... பட்டவர்கள் உயிரிழந்து அல்லது காணாமல் போயிருப்ப... நாடுகள் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

## துருக்கி பாராளுமன்றம் அருகே குண்டுவெடிப்பு

(அங்காரா)

துருக்கி பாராளுமன்ற வளா கத்திற்கு அருகில் குண்டு வெடிப் புச் சம்பவம் இடம்பெற்றுள்ள தாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்காராவில் உள்ள பாரா ளுமன்ற வளாகம் மற்றும் துருக்கிய உள்துறை அமைச்ச கத்திற்கு அருகாமையில் இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற் றுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

இந்த தாக்குதலில் இரண்டு பொலிஸார் காயமடைந்துள் ளதாக துருக்கி உள்துறை அமைச்சர் அலி யெர்லிகாயா தெரிவித்தார்.

இரண்டு தாக்குதல்காரர்கள் வணிக வாகனத்தில் வந்து தாக்குதலை நடத்தியதாகவும் ஒரு தாக்குதலாளி அமைச்சக கட்டடத்தின் முன் தன்னைத் தானே வெடிக்கச் செய்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் கூடுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## விவாத நிகழ்வின் நேரடி ஒளிபரப்பில் கட்டிப்புரண்டு சண்டையிட்ட விருந்தினர்கள்



(இஸ்லாமாபாத்)

தொலைக்காட்சி விவாதத்தின் போது ஆளுங் கட்சி மற்றும் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

பாகிஸ்தானில் உள்ள தனியார் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமரான இம்ரான்கான் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஷேர் அப்சல் மார்வத் மற்றும் அங்கு இப்போது ஆளும் கட்சியாக உள்ள பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம் எல்-என்) கட்சியைச் சேர்ந்த அஃப்னானுல்லா கான் ஆகியோர் விவாதம் ஒன்றில் கலந்து கொண்டனர்.

அப்போது இம்ரான் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் அப்சல் மார்வத் திடீரென எழுந்து அஃப்னானுல்லா கானை ஓங்கி ஒரு அறை அறைந்தார். இதனால் ஆத்திரமடைந்த அஃப்னானுல்லா கானும் தாக்குதலில் இறங்கினார். இருவரும் மாறி மாறி அடித்துக் கொண்டனர். நிகழ்ச்சி நெறியாளர் அவர்களை அமைதிப்படுத்த முயன்ற போதும் ஒன்றும் நடக்கவில்லை. இருவரும் மாறி மாறி தாக்கிக் கொண்டனர். இதனால் அங்கே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பான வீடியோ இணை யத்தில் வைரலாகும் நிலையில் நெட்டிசன்கள் பலரும் நக்கலடித்து வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ரோப்பிய நாடுகளுக்கு ...துவரை 2500 பேர் பலி



...களுக்குச் செல்லும்
...00 இற்கும் மேற்
...திருப்பதாக ஐக்கிய

அதன்படி, குறித்த காலப் பகுதியில் சுமார் 186,000 பேர் ஐரோப்பிய நாடுகளை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகரகத்தின் பணிப்பாளர் ருவேன் மெனிக்திவேலா ஐ.நா பாதுகாப்புச் சபையில் இது தொடர்பில் அண்மையில் உரையாற்றிய போது ,

186,000 மக்கள் மத்தியதரைக் கடலை கடந்திருப்பதோடு இதில் 83 வீதமான அதாவது சுமார் 130, 000 பேர் இத்தாலியை அடைந்துள்ளனர்.

இவ்வாண்டின் செப்டெம்பர் 24ஆம் திகதிக்குள் மாத்திரம் 2,500இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து அல்லது காணாமல் போயுள்ளனர். இந்த உயிரிழப்புகளில் முடிவை காணவில்லை.


ஐரோப்பாவுக்கான தரை வழிப் பாதையும் இதைப் போன்றே ஆபத்து மிக்கது."

இதேவேளை மத்திய தரைக் கடலைக் கடந்து மக்கள் சென்றடைந்த ஏனைய நாடுகளில் கிரேக்கம், ஸ்பெயின், சைப்ரஸ் மற்றும் மோல்டா நாடுகளும் உள்ளடங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த கடல் பயணத்தை கடக்கும் முயற்சியில் உயிரிழுந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் அதிகரித்திருப்பதாக பாதுகாப்புச் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை கடந்த 2022ஆம் ஆண்டில் இக்காலப்பகுதியில் பதிவாகிய 1,680 உயிரிழப்பு அல்லது காணாமல்போனவர்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மிகப் பெரிய அதிகரிப்பாகும். (நி)

## மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக சீன ஆதரவு வேட்பாளர் தெரிவு



(மாலபே)

மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் சீன ஆதரவாளர் என கருதப்படும் முகமட் முய்சு வெற்றிபெற்றுள்ளார்.

மாலைதீவின் மீதான இந்தியா, சீனாவின் செல்வாக்கின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாக கருதப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் இந்திய ஆதரவு வேட்பாளர் எனகருதப்பட்ட இப்ராஹிம் சோலி தோல்வியடைந்துள்ளார்.

முகமட் பெய்சுக்கு 53.9 வீத் வாக்குகளும் சோலிக்கு 46 வீத வாக்குகளும் கிடைத்துள்ளன. (நி)

## இரண்டாம் உலகப் போரில் மூழ்கிய மூன்று கப்பல்கள்



இரண்டாம் உலகப் போரின்போது பசுபிக் பெருங் கடலில் மூழ்கிய ஜப்பானின் இரு விமானந் தாங்கிக் கப்பல்களையும் அமெரிக்காவின் ஒரு கப்பலையும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.மூழ்கிய ஜப்பானிய கப்பலை முதல்முறையாக வீடியோ பதிவு செய்துள்ளனர்.

மிட்வே சண்டை எனப்படும் இந்தத் தாக்குதலில் ஜப்பானின் இவ்விரு விமானந்தாங்கிக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்துதான், ஜப்பான் வசமிருந்த பசுபிக் பெருங் கடலின் கட்டுப்பாடு அமெரிக்கப் படைகள் வசம் மாறியது.

1942 ஜூனில் நடந்த சண்டையில் மூழ்கடிக்கப்பட்ட அகாகி, காகா என்ற இரு ஜப்பானிய கப்பல்களும் அமெரிக்காவின் யு எஸ் எஸ் யார்க்டவுன் என்ற கப்பலும் கடல் மட்டத்திலிருந்து சுமார் 4.8 கிலோ மீற்றர் ஆழத்தில் கிடப்பதைத் தற்போது கடலடித் தொல்லியல் ஆய்வில் நீர்மூழ்கிகள் கண்டறிந்து படம் பிடித்துள்ளன.

மேலும் கப்பல்களின் கடைசி நேரத்தில் இந்தச் சண்டையின்போது என்ன நடந்தது என்பதைத் தெரிந்து, தெளிந்துகொள்வதில் தற்போதைய ஆய்வின் போது எடுக்கப்பட்ட தெளிவான வீடியோக்கள் உதவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)



## ஸ்கொட்லாந்தில் இரண்டு ரயில்கள் மோதி விபத்து



(ஸ்கொட்லாந்து)

ஸ்கொட்லாந்தின் ஹைலேண்ட்ஸில் உள்ள அவிமோர் ரயில் நிலையத்தில் இரண்டு ரயில்கள் மோதிவிபத்து ஏற்பட்டது. இதில் பலர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு ரயில்களில் ஒன்று, நூற்றாண்டு பழைமையான பறக்கும் ஸ்காட்ஸ்மேன் ரயிலாகும். இது, மணிக்கு 100 மைல் வேகத்தில் பயணித்த முதல் நீராவி ரயில் ஆகும். விபத்து காரணமாக அவிமோர் நிலையத்தில் ரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதாக ஸ்கொட்லாந்து பொலிஸார் தெரிவித்தனர். (நி)

## காலநிலை மாற்றம் காரணமாக அமேசான் காடுகளில் வறட்சி அபாயம்

(பிரேசில்)

காலநிலை மாற்றம் காரணமாக அமேசான் காடுகளில் வறட்சி ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.உலகின் நுரையீரலாக அமேசான் காடுகள் செயற்படுகின்றன. சனத்தொகை வெளியிடும் கரியமில வாயுக்கள் உள்ளிட்ட நச்சுகளை சுத்திகரித்து ஒக்சிஜன் என்னும் உயிரக்காற்றை உற்பத்தி செய்து வருகிறது.

அமேசான் மலைக்காடுகளின் 60 சதவீதப்பகுதி தென் அமெரிக்கா நாடான பிரேசிலில் உள்ளது.

இந்நிலையில் காலநிலை மாற்றம் கார4ணமாக அமேசானில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் காட்டுத்தீ பரவியது.

கட்டுங்கடங்காத காட்டுத்தீ காரணமாக காடுகள் பலத்த சேதத்திற்கு உள்ளாகின. அங்கு உள்ள அணைகள் உள்ளிட்ட நீரத்தேக்க நிலையங்களின் கொள்ளளவு குறைந்து வருகிறது.

எனவே வரும் காலங்களில் அங்கு வறட்சி ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

பூர்வ பழங்குடிகள் உட்பட 5 இலட்சத்திற்கும் அதிகமான பிரேசில் மக்கள் வறட்சியினால் பாதிக்கப்படுவர் என பிரேசில் நாட்டின் வானிலை ஆராய்ச்சியாளர் கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுமார் 166 கோடி ரூபாய் முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டு நீர்நிலைகளை பாதுகாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அரிசித்திப்பிலி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பெரும்பாலும் வெப்பமான பகுதிகளில் அரிசிதிப்பிலி காணப்படுகிறது. மணமுடைய, மெல்லிய தண்டுக் கொடி. மற்றத் தாவரங்களைப் பற்றிப் படரும். இலைகள் நீளமானவை. இதய வடிவிலானவை. மஞ்சரி செங்குத்தானது, தண்டுடையது. கனிகள் மஞ்சள் கலந்த செவ்விளநீர் நிறமுடையவை. நீள்முட்டை வடிவிலானவை. சதைப் பற்றுடையதாகக் காணப்படும்.

இச்செடியின் உலர் கனியும் வேரும் மருத்துவக் குணங்கள் மிகுந்தவை. சுக்கு, மிளகு, திப்பிலி எனும் திரிகடுகம் தங்க இல்லத்தில் இருந்தால் அங்கு நோய் இருக்காது.

கட்டி யெதிர் நின்று கடு
நோயெல் லாம் பணியும்
திட்டி வினையகலும்
தேகமெத்த -புட்டியாம்
மாமனுக்கு மாமனென
மற்றவர்க்கு மற்றவனாங்
காமமெனுந் திப்பிலிக்கும்
கை (தேரன் - வெண்பா).

கடுமையான கபப் பிணிகளை அகற்றி உடலுக்கு வன்மையை அளித்திடும்.

ஈளை யிரும லிரைப்புப்
பசப் பிணிகள்
மான வொழியாமல் வாட்
டுமே- யாளுமுறை
பாங்கா யறிந்து செய்வீர்
பணிதத்தைப் பண்டிதரே
வேங்கை வாய்ப் பான்
கனை மெய் (தேரன் -
வெண்பா)

ஈளை , இருமல் ,இரைப்பு, (ஆஸ்துமா) ,உப்பிசம் (வயிற்றுப் பொருமல்), முதலிய பணிகளை போக்கத் தக்கவாறு திப்பிலியை ஆள வேண்டிய தாம்.

அரிசிதிப்பிலியால் இருமல்,குன்மம், இரைப்பு, கபப் பிணி, ஈளை, பாண்டு, மயக்கம்,சுவையின்மை, பொருமல், தலைவலி, மூர்ச்சை, நீரேற்றம்,தொண்டை நோய், மூக்கு- காது- கண் - நோய்கள், புழு நோய்கள் கண் இடுக்கு ஆகியவை நீங்கும். நீற்ற விந்து இறுகும்.

### மருத்துவப் பண்புகள்

தேவையானளவு திப்பிலியை எடுத்து அம்மியில் வைத்து தட்டி, அரைத்து எடுத்த தூளை ஒரு மெல்லிய துணியில் அரித்து, ஒரு புட்டியில் சேமித்து வைத்து தேவையான போது 1-2 கிராம் அளவு எடுத்து தேன் விட்டுக் குழைத்து உட்கொள்ள இருமல், வாய்வு நீங்கி நல்ல ஜீரண சக்தியும் உண்டாக்கும்.

தேவையானளவு உலர்ந்த திப்பிலியை எடுத்து ஒரு மண்பானையில் போட்டு மூழ்கும் அளவு வல்லாரைச் சாறு விட்டு 20 நாட்கள் வெய்யிலில் வைக்கவும். தினமும் புதுப்புதுச்சாறு விட வேண்டும். சாறு முற்றாக சுவறி உலர்ந்ததும் திப்பிலி மூழ்கும் வரை தேன்விட்டு 20 நாட்கள் அப்படியே வைத்து மொத்தமாக 40 நாட்கள் சென்றதும், தினமும் காலையில் ஒரு திப்பிலியை எடுத்து வாயிலிட்டு மென்று சாப்பிட நோய்கள் உடலை அணுகாது காப்பதுடன், உடலிற்கு காய கற்பமாகவும் அமையும்.

ஒரே அளவில் சுக்கு (வேர்க் கொம்பு).மிளகு , திப்பிலி மூன்றையும் எடுத்து சுக்கிற்கு மேற்றோலை சுரண்டி உரலில் போட்டு இடித்து அரித்து தூள் செய்து கொள்ளவும். இத்தூளை 500 மில்லி கிராம் (அரை கிராம்) அளவு எடுத்து வாயில் போட்டு இளஞ்சூட்டு நீர் அருந்தவும் . நாளடைவில் மந்தத்தால் ஏற்பட்ட பேதி குறையும்.

தேவையான திப்பிலி, நெல்லிவற்றல், நெற்பொரி, சீரகம் ஆகிய நான்கையும் உரலில் போட்டு இடித்து காரிக்கன் துணியில் அரித்து ஒரு மண் பாத்திரத்தில் போட்டு அதற்கு தகுந்த நீர்விட்டு (1 பங்கிற்கு 4 பங்கு நீர்) அடுப்பில் வைத்துக் காய்ச்சிய குடிநீரை இறக்கி வடித்து 15-30 மில்லி அருந்த பித்தத்தினால் ஏற்பட்ட வாந்தி அடங்கும்.

தேவையான அளவு திப்பிலியும் சுக்கும் எடுத்தும் உரலில் போட்டு இடித்து ஒரு மெல்லிய துணியில் தூளைப் போட்டு அரித்து சேகரித்து வைத்துக் கொள்ளவும், தேவையான போது 3 கிராம் தூளை எடுத்து வாயில் போட்டு வெந்நீர் அருந்தவும், தலைவலி, காய்ச்சல், அஜீரணம் ஆகியவை நீங்கி பசியை தோற்றுவிக்கும்.

அரிசித்திப்பிலி 200 கிராம் எடுத்து ஒரு தட்டில் பரப்பி அதில் வல்லாரை இலையை இடித்துப் பிழிந்த ரசத்தை விட்டு நிழல் வெயிலில் உலர்த்த வேண்டும்.

இப்படியான மேற்படி திப்பிலியை 7 முறை வல்லாரை ரசம் விட்டு காயவைத்து உலர்த்திய பின் ஒரு புட்டியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். இதன் பெயர் பாவனத்திப்பிலி என்பதாகும். தினமும் காலையில் ஒன்று எடுத்து வாயில் போட்டு அடக்கி வைத்து வாயில் வரும் நீரை விழுங்கி வரவும்.

இதனால் ஞாபக சக்தி அதிகரிக்கும். மூளைக்கு பலத்தைக் கொடுக்கும். கொண்டைக் கரகரப்பு, இருமல் நீங்கி நுரையீரல் பலப்படும். சுவாசக் குழாயில் தங்கும் சளியையும் வெளியேற்ற உதவும்.

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலி மற்றும் கர்ப்பப்பையைப் பலப்படுத்த திப்பிலி 100 கிராம், கருஞ்சீரகம் 50 கிராம், சுக்கு 50 கிராம், மிளகு 25 கிராம், நற்சீரகம் 25 கிராம் , திப்பிலியை ஒன்றிரண்டாக இடித்துக் கொள்ளவும். கருஞ்சீரகம், மிளகு, நற்சீரகம் ஆகிய வற்றைப் போட்டு இளம் வறுவலாக வறுத்துக் கொள்ளவும்.

சுக்கை தோல் நீக்கி எல்லா சரக்குகளையும் ஒன்றாய் இடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். காலை 6 மணிக்கு 1 தேக்கரண்டியும் பகல் 12 மணிக்கு 1/2 தேக்கரண்டியும் மாலை 6 மணிக்கு 1 தேக்கரண்டியும் 4 நாட்கள் அருந்த மேற்கூறிய நோய் நிலைமை தீரும்.

திப்பிலி வேரை பால் விட்டரைத்து பாலில் கலக்கி கொடுக்க (2 கிராம் வேரிற்கு 200 மில்லி பசும்பால்) வாத நோய்கள் தீரும்.

திப்பிலி (10 கிராம்), சீரகம்(20 கிராம்), மிளகு (20 கிராம்), ஆகியவற்றுடன் சிவப்பு பச்சையரிசி கால் கிலோ சேர்த்து கஞ்சி காய்ச்சிக் குடித்தால் சளி, இருமல், ஆஸ்துமா, கோழைக்கட்டு போன்றவை தீரும்.

திப்பிலி, சித்தரத்தை, அதிமதுரம், பனங்கற்கண்டு தலா 100 கிராம் எடுத்து அரைத்து தினமும் இரண்டு கிராம் அளவு காலை, மாலை இரு வேளையும் தேனில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் சைனஸ், தும்மல், தலைப்பாரம் போன்றவை குணமாகும்.

திப்பிலி, அக்கராகாரம், அதிமதுரம் மூன்றையும் சம அளவு எடுத்து தினமும் 1 கிராம் அளவு தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் தொண்டைச் சதை விரைவில் கரையும்.

திப்பிலி (10 கிராம்), கிராம்பு(5 கிராம்), மிளகு (5 கிராம்), மஞ்சள் தூள்(1/2 தேக்கரண்டி) ஆகியவற்றை தண்ணீரில் (3 டம்ளர்) போட்டுக் கொதிக்க வைத்து வாய் கொப்பளித்து வந்தால் காது, மூக்கு,தொண்டை சார்ந்த நோய்கள் குணமாகும்.

அரிய பல மருத்துவக் குணங்கள் நிறைந்த திப்பிலியை வீடுகளில் பயிரிட்டு அதனுடைய பயனைப் பெற முடியாதவர்கள் தமிழ் மருந்துக் கடைகளில் விற்பனையாகும். திப்பிலியை உலர் சரக்காக வாங்கி உபயோகிப்பதன் மூலம் சிறந்த மருத்துவப் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

### 100 கிராம் திப்பிலியிலுள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-12.5 கிராம், புரதம்-13.2,கொழுப்பு-4.7, நார்ச்சத்து-5.2 கிராம், காபோவைதரேற்று-58.4 கிராம், , கல்சியம்-460 மில்லிகிராம், பொஸ்பரஸ்-325 மில்லி கிராம், இரும்பு-13.5 மில்லி கிராம், சக்தி-329 கிலோ கலோரி.

### திப்பிலி சட்னி

திப்பிலி 50 கிராம், மிளகு 1 தேக்கரண்டி, சீரகம் 1/2 தேக்கரண்டி, கொத்தமல்லி 1 தேக்கரண்டி, ஓமம் 1/4 தேக்கரண்டி, உப்பு தேவையான அளவு, பெருங்காயம் சிறிதளவு, புளி தேவையான அளவு இவை அனைத்தையும் முதலில் தயார் செய்து கொள்ளவும்.

உப்பு, புளியைத் தவிர மேற்குறிப்பிட்ட பொருட்களை ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து சாதாரணமாக வறுத்துக் கொள்ளவும்.பின்பு புளியை சுட்டு வைக்கவும். கடைசியாக உப்பையும் வறுத்துக் கொண்டு அனைத்தையும் மிக்ஸியில் போட்டு சிறிது நீர்விட்டு இளவலாக அரைத்து எடுக்கவும். தேவையான அளவு தக்காளியை சேர்த்துக் கொள்ளவும். இந்த திப்பிலி சட்னியை சோற்றுடன் பிசைந்து சாப்பிடலாம்.

இதனால் இருமல், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வாய்வுத் தொல்லை நீங்கி நல்ல பசியுண்டாகும். இவ்வாறான மருத்துவ குணம் மிக்க மூலிகைப் பொருட்களை இயற்கையான முறையில் உணவில் சேர்த்துக் கொண்டால் ஆரோக்கியத்தை உங்களுடனேயே வைத்துக் கொள்ளலாம்.


### திப்பிலி ரசம்

கொத்தமல்லி-10 கிராம், சீரகம்-2 கிராம், மிளகு-1 கிராம், நற்சீரகம்-3 கிராம், உள்ளி- 5 கிராம், உப்பு-தேவையான அளவு, திப்பிலி- 5 கிராம்.

மேலே கூறிய சரக்குகளை இடித்து தேவையான அளவு தண்ணீர் சேர்த்து நன்கு காய்ச்சி வடித்து அதில் இரண்டு மேசைக் கரண்டிகள் காலை 10 மணி அளவில் எடுத்துக் கொண்டு வர பசி உண்டாகும்.மந்தத் தன்மைகள் நீங்கும், நெஞ்சில் உள்ள சளியை இளக்கப் பண்ணி அதனை வெளிக் கொண்டு வர திப்பிலி ரசம் உதவும்.

இலக்கிய காலங்களில் திப்பிலி ஒரு பிரதான மருத்துவ மூலிகையாகவும் உணவுப் பொருட்களுடன் சேர்த்தும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இவ்வாறு இத் திப்பிலியின் சிறந்த மருத்துவப் பயன்களை இலக்கியங்களில் தனித்துவத்தன்மை பெற்று விளங்கும் நூல்களான ஆசாரக் கோவை, திரிகடுகம், ஏலாதி போன்றவற்றில் திப்பிலியின் பயன்பாடு நோய் நிலைமைகளில் மருந்தாகவும், உணவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய திப்பிலி சூர்கதி, குடோரி, கோலகம் கோலி, கோழையறுக்கி பிப்பிலி, வைதேகி, அம்பு, ஆதி மருந்து போன்ற வேற பெயர்களாலும் அழைக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்கக்கோரி கையெழுத்துவேட்டை

(கண்டாவளை)

**கிளிநொச்சியில் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்க கோரி தமிழத் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டமும் கையெழுத்து திரட்டும் நடவடிக்கையும் இடம்பெற்றது.**

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரீ.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்க கோரி தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையினுடைய ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக கவனயீர்ப்பு போராட்டமும் கையெழுத்து திரட்டும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டன. (நி-6-315-316)



# முல்லை நீதிபதியின் பதவிவிலகல் அரசின் அடிமைத்தனத்தின் வெளிப்பாடு

## கஜேந்திரகுமார் எம்.பி

(அராலி)

நீதிவான் சரவணராஜாவுடைய பதவி விலகலும், நாட்டினை விட்டு வெளியேறிய விடயமும் உண்மையிலேயே இலங்கையின் அடக்கு முறையை வெளிப்படுத்தி இருக்கிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி பதவி விலகியமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலே தொடர்ந்தும் ஒரு சிங்கள பௌத்தத்தினுடைய இனவாத போக்கை தவிர்ந்த வேறு எந்தவொரு செயற்பாட்டிற்கும் இடமே கிடையாது. நீதித்துறை உட்பட அந்த சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அடிபணிந்து செயற்பட்டு அதை கடைப்பிடித்து பாதுகாக்கின்ற ஒரு துறையாக அமைந்துள்ளது. தமிழர்களுக்கு அல்லது முஸ்லிம்களுக்கு அல்லது சிங்கள பௌத்தர்களுடைய நலன்கள் அல்லாத வேறு எந்தவொரு தரப்புக்கும் எதிராகவும் வந்து நீதியை நியாயத்தை தேட முடியாது என்ற விடயம் இந்த நீதிவான்சரவணராஜா உடைய பாதிப்பின் ஊடாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அவருக்கு எதிராக, அவரை குறிவைத்து அவர் உறுதியாகவும் துணிந்து ஒரு நீதிக்காக எடுத்த முடிவுகளுக்கு பாராட்டை தெரிவிக்கின்ற அதே நேரம், அவருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மிக மோசமான இனவாத செயற்பாடுகள், அச்சுறுத்தல்கள், அடிபணிய வைக்கக்கூடிய முயற்சிகள் போன்ற அனைத்தையும் நாங்கள் வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்தார். (நி-6-104)

# சிறுமி கடத்தல் விவகாரம் தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்யையும் இல்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பரமன் கிராய் பிரதேசத்தில் 15 வயதுடைய சிறுமி கடத்தல் சம்பவம் தொடர்பில் ஒருமாதம் கடந்தும் பொலிஸார் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென கடத்தப்பட்ட சிறுமியின் பெற்றோரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பரமன் கிராய் பகுதியில் தரம் பத்தில் கல்வி கற்கும் 15 வயதுடைய சிறுமி ஒருவரை கடத்திச் சென்றுள்ளதாக அவரது பெற்றோர்களால் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை பொலிஸார் எந்த விதமான நடவழக்கைகளையும் எடுக்காது குறித்து பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். (நி-5-315)

# வவுனியாவில் 59564.35 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை

(குருமன்காடு)

வவுனியாவில் 59564.35 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக மழை இன்மை மற்றும் அதிக வெப்பம் காரணமாக ஏற்பட்ட வரட்சி காரணமாக குளங்களில் நீர் இன்றி வறண்டு போயுள்ளதுடன் மாவட்டமே வறட்சியால் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

தற்போது நிலவும் வறட்சி காரணமாக பெரும்போக விவசாய நடவடிக்கையினை விவசாயிகள் ஆரம்பிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதுடன், தங்கள் வயல் நிலங்களை பெரும்போக செயற்பாட்டிற்காக பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை இனிவரும் நாட்களில் மாவட்டத்தில் மழை பெய்யும் நிலையிலேயே பெரும்போக விவசாய நடவடிக்கையினை மேற்கொள்ள முடியுமென விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (நி-6-250)

# 25 லட்சம் பெறுமதியான போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு

(மன்னார்)

மன்னார் - முருங்கன் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை . அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மன்னார் முருங்கன் பகுதியில் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பாரிய ஐஸ் போதைப்பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்ற புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 25 இலட்சம் ரூபா பெறுமதியான 178.75 கிராம் நிறை கொண்ட ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கடத்தலில் ஈடுபட்ட முக்கிய வியாபாரி அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன் கடத்தலை மேற்கொண்ட முருங்கன் பிட்டி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளதுடன் தப்பி ஓடிய நபர் மற்றும் கடத்தல் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-285)

சிறுவர் தினத்தை முன்னிட்டு போரினில் உயிரிழந்த சிறுவர்களின் ஞாபகார்த்தமாக கிளிநொச்சி மகா வித்தியாலய 2015 ஆம் ஆண்டு பழைய மாணவர்கள் மற்றும் றோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இரத்ததானமுகாமில் நூற்றுக்கு மேற்பட்ட



குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

(படம் - தேவானந்தம்)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 600 |
| தக்காளி | 180 | 150 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 160 | 160 |
| கோவா | 200 | 150 | 150 | 200 |
| கரட் | 300 | 280 | 250 | 400 |
| பூசணி | 60 | 80 | 60 | 60 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 160 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 250 |
| பாகற்காய் | 400 | 450 | 350 | 500 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 160 | 150 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 160 | 150 | 240 |
| கறிமிளகாய் | 250 | 350 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1300 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 40-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 20 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 2
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 297



நீ இவ்வளவு உதவி செய்தாயே? அதுவே போதும்!"

படகு நாகதீபத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பூங்குழலியின் கைகள் துடுப்பை வழக்கம்போல் வலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவளுடைய உள்ளம் வேறு எங்கேயோ கனவுலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது என்பது முகத்திலிருந்து தெரிந்தது.

"சமுத்திர குமாரி!" என்று வந்தியத்தேவன் அழைக்கவும், அவள் திடுக்கிட்டு இவ்வுலகத்துக்கு வந்தாள்.

"ஏன் கூப்பிட்டாய்?" என்று கேட்டாள்.

"ஏதோ என்னிடம் பிரதி உபகாரத்தை எதிர்பார்ப்பதாகச் சொன்னாயே? அதை இப்போது சொன்னால் தான் சொன்னது. இதோ கரை நெருங்கி வருகிறது."

பூங்குழலி உடனே மறுதளிக் கவில்லை சிந்திப்பதாகத் தோன்றியது. ஆகையால் வந்தியத்தேவன் தைரியம் கொண்டு மேலும் கூறினான்.

"நீ எனக்குச் செய்த உதவி மிகப்பெரியது. எனக்கு மட்டும் நீ உதவவில்லை சோழ சாம்ராஜ்யத்துக்கே உதவி புரிந்திருக்கிறாய். சோழ சக்கரவர்த்தியின் குலத்துக்கு மாபெரும் உதவி புரிந்திருக்கிறாய். இதற்குப் பிரதியாக நான் ஏதாவது செய்யாவிட்டால் என் மனம் நிம்மதியடையாது" என்றான்.

"இதையெல்லாம் நீ உண்மையாகச் சொல்லுகிறாயா? அல்லது உலகத்திலுள்ள மற்ற ஆண் மக்களைப்போல் வஞ்சகம் பேசுகிறாயா?"

"சமுத்திர ராஜன் அறியச் சத்தியமாகச் சொல்கிறேன்."

"அதாவது தண்ணீரில் எழுதி வைக்கிறேன் என்கிறாயா?"

"ஆகாச வாணியும், பூமாதேவியும், அஷ்ட திக்குப் பாலகர்களும், சூரிய சந்திரர்களும் அறிய ஆணையிட்டுச் சொல்லுகிறேன்."

"உன்னுடைய சத்தியத்தையும் ஆணையையும் நம்பி நான் சொல்லவில்லை. பொய் சொல்லும் வஞ்சகர்கள் சத்தியத்துக்கும் ஆணைக்கும் மட்டும் பயந்து விடுவார்களா? உன்னை முதன்முதல் பார்த்தவுடனேயே நீ நல்லவன் என்று எனக்குத் தோன்றியது ஆகையினால் சொல்லுகிறேன்."

"முதலில் தோன்றிய எண்ணந்தான் எப்போதும் மேலானது. அதை நீ மாற்றிக் கொள்ள வேண்டாம்."

"பொன்னியின் செல்வரைப் பார்த்து அவரிடம் ஓலையைக் கொடுத்த பிறகு, சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிப் பேச வேண்டியதையெல்லாம் பேசிய பிறகு, அவர் அவகாசத்துடன் இருக்கும்போது 'சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?' என்று கேள். 'ஞாபகம் இருக்கிறது' என்று அவர் சொன்னால், 'அவள்தான் எனக்குப் படகு வலித்துக்கொண்டு வந்து இலங்கையில் இறக்கி விட்டாள்' என்று கூறு!"

'பூங்குழலி! அவ்வளவு உயரத்திலேயா நீ பறக்கப் பார்க்கிறாய்? சிட்டுக் குருவி ஒன்று ககன ராஜாவாகிய கருடன் பறக்குமிடத்துக்கு நானும் போவேன் என்று பறக்கத் தொடங்கலாமா? இது உனக்கு நல்லதல்லவே?' இவ்வாறு வந்தியத்தேவன் மனத்தில் எண்ணிக் கொண்டான்.

வெளிப்படையாக, "இதைச் சொல்லத்தானா, இவ்வளவு தயங்கினாய்? என்னமோ பெரியதாகக் கேட்கப் போகிறாய் என்று நினைத்தேன். இளவரசரிடம் கட்டாயம் நான் சொல்லுகிறேன்! அவர் கேட்காமற் போனாலும் நானே சொல்லுகிறேன்!" என்றான்.

"ஐயையோ! அவர் கேட்காவிட்டால் நீயாக ஒன்றும் சொல்லவேண்டாம்!"

"அதெல்லாம் முடியாது சொல்லித்தான் தீருவேன்."


"என்ன சொல்லுவாய்?"

நடந்தது நடந்தபடிதான் சொல்லுவேன்.

'இளவரசே! பொன்னியின் செல்வரே! சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிற தல்லவா? ஞாபகம் இல்லா விட்டால், இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்! அவள் தான் என்னைப் பழுவேட்டரையரின் கொலைகார ஆட்களிடம் சிக்காமல் காப்பாற்றினாள்.

தன்னந்தனியாகப் படகு தள்ளிக்கொண்டு வந்து என்னை இலங்கையில் சேர்த்தாள். கடலில் விழுந்து தத்தளித்த என்னை அவள் தான் காப்பாற்றிப் படகில் ஏற்றி விட்டாள். சமுத்திர குமாரியின் உதவியிராவிட்டால் நான் உயிருடன் வந்து உங்களைப் பார்த்திருக்க முடியாது. இந்த ஓலையும் உங்களுக்குக் கிடைத்திராது!' என்று சொல்லுவேன், சரிதானே?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கரடியின் கதறல்

(நேற்றைய தொடர்ச்சி..)



ஆனால் புத்தியுள்ள தேனீக்களுக்கு கரடி என்ன செய்ய முயல்கிறது என்பது தெரிந்தது. ரீங்காரம் செய்தவாறே அவை கரடிக்குட்டியை சுற்றி சுற்றி வந்து தங்கள் வலிமை எல்லாம் ஒன்று சேர்த்து கொடுக்குகளினால் கொட்டின.

வேகமாக தேனீக்கள் தாக்கியதால் பயந்துபோன கரடிக்குட்டி தனது எண்ணத்தை கைவிட்டு ஓடத் தொடங்கியது.

வலி அதிகமானதால் கரடி வேகமாக ஓடியது.

ஆனால் கரடியை தொடர்ந்து கொட்டியவாறு தேனீக்கள் பின்தொடர்ந்தன. தாங்கள் அரும்பாடு பட்டு சேர்த்த தேனை அழிக்க நினைத்த பேராசை கரடிக்கு பாடம் புகட்ட விரும்பின.

வலியால் துடி துடித்த கரடிக்குட்டி வழியில்லாமல் வேகமாக ஓடி தனக்கு முன்னால் இருந்த ஆற்றில் குதித்தது. தேனீக்கள் கரடி வெளிய வரட்டும் என கோபத்தில் காத்துக் கொண்டிருந்தன.

கரடிக்குட்டியோ தண்ணீருக்கு அடியில் மூச்சை அடக்கிக் கொண்டு இருந்தது. மேலும் வலிக்கு தண்ணீரில் இருப்பது இதமாக இருந்தது. சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த தேனீக்கள் தங்கள் கூட்டை நோக்கி கிளம்பின.

உடலில் பட்ட காயத்துக்கு வருந்தியபடி தண்ணீரைவிட்டு வெளியேறி தனது இடத்திற்கு சென்றது. தனது தவறை நினைத்து கரடிக் குட்டிக்கு அழுகை வந்தது. இனி இனிப்பான தேனை நினைத்தாலே கரடிக்கு கசப்பான அனுபவம் தான்.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுன்னு சொல்லுவாங்கல்ல அதுதான் இது. அது போக மத்தவங்க உழைப்பை திருடவும் கூடாது. அது நமக்கு ஆபத்துல தான் முடியும்.

நீங்களும் உங்க உழைப்பை நம்பி ஒரு வேலையை செய்யுங்க. மத்தவங்க பாதையில குறுக்கிடாதீங்க நமக்கான பார்வையில் அமைதியாக பயணிப்போம். ஆசை வெறி அழிவின்படி.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் எதை உறுதியாக நினைக்கிறானோ அதுவாகவே அவன் மாறிவிடுவான்.
– புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஓர் இராணுவ அதிகாரி பாராளுமன்றம் சென்றால்...

உத்தியோகம் புருஷ இலட்சணம் என்கிறது நம் தமிழர் வாழ்வியல். இதிலிருந்து உத்தியோகம் எத்துணை முக்கியமானதென்பது புலப்படுத்தப்படுகிறது.

அதேநேரம் ஒருவரின் ஆளுமையில் அவரின் நடைமுறை வாழ்வியலில், அவரின் மொழிப் பிரயோகங்களில், பண்பாட்டு விடயங்களில் அவர் வகிக்கும் உத்தியோகம் கணிசமான செல்வாக்குச் செலுத்தும் என்பது நிதர்சனமான உண்மை.

உதாரணத்துக்கு ஒரு வகுப்பறையில் ஒன்றாகப் படித்த மூன்று மாணவர்கள் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு வேலை தேடிச் செல்கின்றனர்.

இதில் ஒருவர் ஆசிரியராகவும் மற்றவர் இராணுவ உத்தியோகத்தராகவும் இன்னொருவர் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராகவும் நியமிக்கப்பட்டு பணியாற்றுகின்றனர் என எடுத்துக் கொண்டால்,

இப்போது இவர்களின் பண்பாட்டுக் கோலங்களை அவர்கள் வகிக்கின்ற பதவிகளே தீர்மானிக்கப் போகின்றன.

ஆம், ஒரு நாடகத்தில் ஒருவர் கண்ணகி பாத்திரமேற்று நடித்தார்.

வழமையில் எதற்கெடுத்தாலும் கோபப்படும் அவர், கோபப்படுகின்ற ஒவ்வொரு வேளையிலும் தான் கட்டியிருக்கும் சாரத்தை மடித்து சண்டியன் கட்டு கட்டிக் கொள்வார்.

இப்போது அவர் சேலை அணிந்து கண்ணகி பாத்திரமேற்றுள்ளார்.

அங்கு சிலர் முற்பட்டு தாயே! கோவலனைக் கொன்று விட்டார்கள் என்று கூற, ஆத்திரமுற்ற அவர் உடனடியாக தான் கட்டியிருக்கும் சேலையை தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டு "யாரடா என் கணவனைக் கொன்றது எனக் கேட்க", சபை சிரிப்பொலியால் அதிர்ந்தது.

நாடகத் தயாரிப்பாளர் விரைந்து திரையை மூடி நிலைமையை சமாளித்துக் கொண்டார்.

ஆக, பழக்கதோசங்களும் தாம் தாம் செய்த வேலைகளின் இயல்புகளும் சந்தர்ப்பத்தில் வந்தே ஆகும்.

இதற்கு நல்ல உதாரணம் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

ஆம், சரத் வீரசேகர இராணுவ உத்தியோகத்தராக இருந்தவர். இலங்கையில் இராணுவத்தில் இருந்தவர் என்றால் தமிழர்கள் தொடர்பில் அவரின் மனநிலை எவ்வாறாக இருக்கும் என்பதை அவரே பாராளுமன்றத்தில் நிரூபித்து விட்டார்.

ஆம், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்காக பிரஸ்தாப நீதிபதியை கண்டபாட்டில் விமர்சித்து பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர உரையாற்றியிருந்தார்.

விசாரணை என்ற பேரில் நிரபராதிகளைக் கட்டிப்போட்டு தாக்குகின்ற இராணுவத்தைத் தவிர வேறு யாராலும் அப்படி பேசமுடியாது என்பதை அவர் நிரூபித்து விட்டார்.

என்ன செய்வது இராணுவத்தில் இருந்த ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்கிவிட, அவர் நீதிபதிகளையே அதட்டி, வெருட்டி, உயிர் அச்சுறுத்தல் கொடுத்து எல்லாவற்றையும் போட்டுடைத்து விட்டார்.

# மருந்துக் கொள்வனவில் பாரிய மோசடி நேர்மையான விசாரணை அவசியம்

## முன்னிலை சோசலிச கட்சி

(கொழும்பு)

மருந்துக் கொள்வனவில் இடம்பெற்ற பாரிய மோசடி தொடர்பில் ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தொடர்பில் திருப்தியடைய முடியாது என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்வி செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

மருந்துக் கொள்வனவு தொடர்பான கேள்வி கோரல் நடைமுறையில் ஈடுபட்ட அதிகாரிகளே உரிய குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மிகக்குறைந்த விலையில் மருந்துகளை கொள்வனவு செய்யக்கூடிய நிலை இருந்தும், அதிக விலைக்கு கொள்வனவு செய்து இந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

ஒரு மருந்தை 0.15 டொலருக்கு வாங்க கூடிய நிலை இருந்தும் குறித்த மருந்தை 10.03 டொலருக்கு வாங்கப்படுவதாகவும், இதன் மூலம் சுமார் 10 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் இது இலங்கை பணத்தில் 30 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் எனவும் தெரிவித்த அவர் நேர்மையான விசாரணை அவசியம் எனவும் தெரிவித்தார். (7)

# பாடசாலை சிற்றுண்டிச்சாலையூடாக மாணவர்களுக்கு நோய் தொற்றுகள் ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை

சுகாதார அமைச்சின் உத்தரவை அடுத்து, பொது சுகாதார பரிசோதகர்கள் (PHI) ஒன்றியம், கல்வி அமைச்சுடன் இணைந்து, தொற்றாத நோய்கள் (NCDs) பாடசாலை மாணவர்களிடையே ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார தொழிற்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன பாடசாலை உணவகக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்குச் செயல்படுவதாக தெரிவித்தார். கொள்கையின்படி, பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் அதிக அளவு கொழுப்பு, உப்பு மற்றும் பாதுகாப்பு பொருட்கள் மற்றும் கார்பனேற்றப்பட்ட பானங்கள் அடங்கிய உணவுப் பொருட்களை விற்பனை செய்வது தடை செய்யப்படும்.

இதன்பொருட்டு தனியார் மற்றும் அரச பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சோதனைகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறிய அவர், கொள்கையை மீறும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார். (7)

# குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பசறை - லுணுகலை ஹொப்டன் - யப்பாம தனியார் தோட்டத்தில் தொழிலுக்கு சென்ற நபர் ஒருவர் குளவிக்கொட்டியதில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளவிக் கொட்டுக்கு இலக்கான குறித்த நபர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் லுணுகலை - ஹொப்டன் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

# உழவு இயந்திர விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தில் உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்துச் சம்பவத்தில் மூதூர் - பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுந்தரவதனன் (வயது 39) என்பவரே உயிரிழந்தவராவார்.

உழவு வேலைக்காக பாரதிபுரம் பகுதியில் இருந்து கிளிவெட்டி - தங்கநகர் நோக்கிச் சென்றபோது தங்கநகர் பகுதியில் வைத்து உழவு இயந்திரம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள வாய்க்காலினுள் விழுந்ததால் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (7)

# நீதித்துறையின் சுதந்திரம் காக்க யாவரும் ஒன்றிணைந்திடுவோம்

## ஹர்ஷ டி சில்வா அழைப்பு

(கொழும்பு)

குருந்தூர் மலை உத்தரவிற்காக மிரட்டல்களை எதிர்கொண்டால் நீதிபதி சரவணராஜா பதவி விலகினார் என வெளியாகும் தகவல்களால் நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சில பிரிவினரின் மிரட்டல்கள் மன வருத்தமளிக்கின்றன.

நீதிபதிகள் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுபவர்கள் அவர்களிற்கு ஏற்படும் அச்சுறுத்தல் ஜனநாயகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது எனவும் டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர் அச்சமின்றி நீதியை வழங்குபவர்களை நாங்கள் பாதுகாக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பக்கச்சார்பற்ற விசாரணைக்கான குரல்களுடன் எங்களையும் இணைத்துக்கொள்ளும் நாங்கள் ஐக்கியப்பட்டு இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்போம் இலங்கையின் அடையாளத்தை தழுவுவோம் எனவும் ஹர்ஷ டி சில்வா பதிவிட்டுள்ளார். (7)

# பொலிஸ் தடுப்பிலிருந்த கைதி கை விலங்குடன் தப்பியோட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றை உடைமையில் வைத்திருந்தமை தொடர்பில் சந்தேகத்தில் மித்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் கைவிலங்குடன் தப்பிச் சென்றுள்ளதாக மித்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய நபர் மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெபொக்காவ மேற்கு பிரதேசத்தில் வசிப்பவராவார்.

கடந்த 27ஆம் திகதி, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கைக்குண்டுடன் இவரைக் கைது செய்தது.

அதன் பின்னர், நீதிமன்றில் பெறப்பட்ட உத்தரவின் பேரில் சந்தேகநபர் மித்தெனிய பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-இந்தியா உறவில் விரிசல் பின்னணி பற்றி ஒரு தொகுப்பு

சீக்கியர்களால் 1906 இல் வான் கூவர்கல் சாதிவான் சொசைட்டி உருவாக்கப்பட்டது. மற்றும் அதன் தலைமையின் மூலம் சீக்கியர்கள் தங்களின் முதல் நிரந்தர கோயில் அல்லது குருத்வாராவை ("குருவின் நுழைவாயில்") இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கட்டினார்கள். 1920 வாக்கில், நியூவெஸ்ட் மின்ஸ்டர், விக்டோரியா, நானைமோ, கோல்டன், அபோட்ஸ்ஃபோர்ட், ஃப்ரேசர் மில்ஸ் மற்றும் பால்டி ஆகிய இடங்களில் மற்ற குருத்வாராக்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொன்றும் ஒரு சுயாதீனமான, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் கட்டுப்படுத்தப்பட்டது.

தொடக்கத்தில் இருந்து, குருத்வாராக்கள் கனேடிய சீக்கியர்களின் மைய சமூக நிறுவனங்களாக இருந்தன. அவர்கள் மூலம் சீக்கியர்கள் தேவைப்படும் சமூக உறுப்பினர்களுக்கு விரிவான உதவிகளை வழங்கினர். குடியேற்றத் தடையை நீக்கக் கோரி வியத்தகு போராட்டமும் கோவில்கள் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டது.

கனேடிய சீக்கிய மத நிறுவனங்கள் 1920 களில் வளர்ச்சியின் மற்றொரு கட்டத்தை எட்டியது. சட்டபூர்வ சீக்கிய குடியிருப்பாளர்களின் மனைவிகள் மற்றும் குழந்தைகள் கனடா நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர். சீக்கிய மதம் உலகப் போர்களுக்கு இடையே ஒரு வலுவான கூட்டு அடையாளத்திற்கான அடிப்படையை வழங்கியது. அதனால் சில சீக்கியர்கள் நம்பிக்கையைத் துறந்தனர். அல்லது அதற்கு வெளியே திருமணம் செய்து கொண்டனர். 1920-60 கால கட்டத்தின் முக்கிய மதத்திருத்தம், இரண்டாம் தலைமுறை ஆண்கள் சகஜதாரிகளாக மாறுவதற்கான ஒரு போக்காகும். உதாரணமாக கனேடிய ஆடைக் குறியீடுகளுக்கு இணங்க முடி மற்றும் தாடியை வெட்டுவது போன்றவற்றைக் குறிப்பிடலாம். சில பெண்கள் பாரம்பரிய பஞ்சாபி உடையான சல்வார் கமீஸ்க்கு பதிலாக வேறு ஆடைகளை அணிந்தனர்.

கனடாவில் சீக்கியமதம் 1950 களில் குடியேற்றம் மீண்டும் தொடங்கியவுடன் அதன் தன்மையை மாற்றத் தொடங்கியது. 1960 களில், குடிவரவுச் சட்டங்கள் தளர்த்தப்பட்டு, இன ஒதுக்கீடுகள் அகற்றப்பட்டதால், அதிகமான சீக்கியர்கள் கனடாவுக்குக் குடிபெயர்ந்தனர். போருக்குப் பிந்தைய புலம்பெயர்ந்தோர் பலர் தங்களுக்கு முன் வந்தவர்களை விட நகர்ப்புறம், படித்தவர்கள், மேற்கத்தேய மயமாக்கப்பட்டவர்கள் மற்றும் மதரீதியாக பாரம்பரிய மற்றவர்கள் ஆக இருந்தனர்.

1960 கள் மற்றும் 1970 களில், பல்லாயிரக்கணக்கான திறமையான சீக்கியர்கள், சில உயர் படிப்பு படித்தவர்கள், கனடா முழுவதும் குறிப்பாக டொராண்டோவிலிருந்து வின்ட்சர் வரையிலான நகர்ப்புற நெடுகிலும் குடியேறினர். அவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், சீக்கியர்கள் மொன்றியல் **(Montreal)** கிழக்கே உள்ள **ஒவ்வொரு பெரிய நகரத்திலும்** தற்காலிக குருத்வாராக்களை நிறுவினர். இவை பின்னர் நிரந்தர குருத்வாராக்கள் மற்றும் சீக்கிய மையங்களாக பின்பற்றப்பட்டன.

பெரும்பாலான நகரங்களில் இப்போது பல குருத்வாராக்கள் உள்ளன, ஒவ்வொன்றும் சற்று வித்தியாசமான மதக் காட்சிகள், சமூக அல்லது அரசியல் கருத்துக்கள் அல்லது சாதிப் பின்னணியைப் பிரதிபலிக்கின்றன.

பல சீக்கியர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் கலாசாரம் மற்றும் மதத்தை கற்பிக்கிறார்கள். கோயில்கள் குழந்தைகளுக்கு மதக் கட்டளைகள் மற்றும் எழுதப்பட்ட மொழியைக் கற்பிக்கும் வகுப்புகளை வழங்குகின்றன. சில இரண்டாம் தலைமுறை சீக்கியர்கள் சிறு வயதிலிருந்தே பஞ்சாபி மொழி பேசுகிறார்கள். ஆனால் குருகிரந்த் சாஹிப்பில் இருந்து படிக்க, தனித்துவமான சீக்கிய குருமுகி எழுத்து முறையை முறையாகக் கற்க வேண்டும்.

ஒரு தனித்துவமான தேசிய சீக்கிய மத அமைப்பை உருவாக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த நோக்கம் இன்னும் அடையப்படவில்லை. சீக்கியப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க தேசிய மற்றும் பிராந்திய மாநாடுகள் பல நகரங்களில் நடத்தப்படுகின்றன. மேலும் பல்வேறு பிராந்திய கோயில் அமைப்புகளுக்கு இடையே முறை சாரா தொடர்புகள் வழக்கமாக பராமரிக்கப்படுகின்றன.

கனேடிய சீக்கிய மதத்தின் முதன்மை நிறுவன அடிப்படையானது உள்ளூர் குருத்வாராசங்கம் மற்றும் சில சீக்கிய கனேடியர்களும் இந்தியாவுடன் வலுவான மத உறவுகளைப் பேணுகின்றனர்.

சீக்கிய உரிமைகள் மற்றும் சுதந்திர சீக்கிய மாநிலமான காலிஸ்தானுக்கான தேசியவாத இயக்கத்தின் எழுச்சி போன்ற இந்தியாவில் சீக்கியர்கள் மற்றும் சீக்கியர்கள் தொடர்பான நிகழ்வுகளால் கனேடிய சீக்கியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பல கனேடிய சீக்கியர்கள் இந்த இயக்கத்திற்கு நிதி ரீதியாக ஆதரவளித்துள்ளனர். குறிப்பாக 1984 ஆம் ஆண்டு பொற்கோயிலின் மீதான இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்குப் பிறகு இந் நிலைமை ஏற்பட்டுள்ளது.

31 ஒக்டோபர் 1984 இல் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவரது இரு சீக்கியப் பாதுகாவலர்களால் படுகொலை செய்யப்பட்ட போது கனேடிய இந்து-சீக்கிய உறவுகள் மேலும் சீர்குலைந்தன. இந்தியாவில், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைப் பின்னடைவில் 2,500 இற்கும் மேற்பட்ட சீக்கியர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இப்படுகொலைகளின் பின் கனேடிய சீக்கியர்களை இந்திய அரசாங்கத்திலிருந்து மேலும் அந்நியப்படுத்தியது மற்றும் பிரிவினைவாத உணர்வுகளை தூண்டியது. 23 ஜூன் 1985 அன்று, ஏர் இந்தியா விமானம் 182 தகர்க்கப்பட்டது. இது கனடாவை தளமாகக் கொண்ட சீக்கியர்களால் இந்திய அரசாங்கத்திற்கு எதிரான பழிவாங்கும் செயலாக பரவலாகக் கருதப்பட்டது. விமானத்தில் இறந்த 329 பேரில் பெரும்பாலானவர்கள் தெற்காசிய கனேடியர்கள். அவர்களில் சிலர் சீக்கியர்கள்.

**அண்மையில் இந்தியாவில் நடந்த ஜி 20 உச்சி மாநாடு**

இரு நாடுகளுக்குமிடையே விரிசலை ஏற்படுத்த ஜி 20 உச்சி மாநாடும் ஒரு காரணமாக அமைந்து விட்டது. ஜி 20 உச்சி மாநாட்டுக்காக இந்தியா சென்ற கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கனடாவில் காலிஸ்தான் அமைப்பினர் இந்திய தூதரக அதிகாரிகளை அச்சுறுத்துதல், தூதரக அதிகாரிகளுக்கெதிரான வன்முறை முதலான விடயங்கள் குறித்துப் பேச, அது கனடா பிரதமர் அவமதிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. இந்நிலையில், நாடு திரும்பிய ட்ரூடோ, கனடாவில் கொல்லப்பட்ட சீக்கியர் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் படுகொலையில் இந்திய அரசாங்கத்தின் பங்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படையாக குற்றம் சாட்டினார். அதைத் தொடர்ந்து, இந்திய தூதரக அதிகாரி ஒருவரை, நாட்டை விட்டு வெளியேறும் படி கனடா உத்தர விட்டது.

அமெரிக்கா இந்த விவகாரத்தில், "கனடா அரசின் குற்றச்சாட்டுகள் மிகவும் கவலைக்குரியவை" எனக் கூறியுள்ளது. கனடாவுடன் தொடர்பில் இருப்பதாக கூறிய பிரிட்டன் செய்திதொடர்பாளர், "இந்த விவகாரத்தை கனடா உளவுத்துறை விசாரித்து வருவதால் அதிக கருத்துக்களை தெரிவிப்பது சரியாக இருக்காது" எனக் கூறியுள்ளார்.

கனடா - இந்திய அரசு செப்டெம்பரில் செய்யவிருந்த தடையற்ற பொருளாதாரத்துக்கான பேச்சுவார்த்தையை தள்ளி வைத்துள்ளனர். ஜி 20 மாநாட்டில் கனடா பிரதமர் கலந்து கொண்ட போதிலும் இரு தலைவர்களும் சந்தித்துக்கொண்ட போது இருவருமே இறுக்கமான முகத்துடன் இருந்ததைப் பார்க்க முடிந்தது.

இந்தியா தற்போது உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாகவும் உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாகவும் உள்ளது. சுமார் நான்கு கோடி மக்கள் தொகை கொண்ட கனடாவின் பொருளாதாரமும் உலகின் முதல் பத்து பொருளாதாரங்களில் இடம்பெற்றுள்ளது. இந்தியாவை ஒப்பிடும் போது கனடாவின் பரப்பளவு இந்தியாவை விட 204 சதவிகிதம் பெரியதாக இருந்தாலும் கனடாவின் மக்கள் தொகை இந்தியாவை விட மிகக்குறைவு.

இந்தியாவுடனான கனடாவின் வளர்ந்து வரும் விரிசல் குறித்து கனேடிய ஊடகங்களில் கவலை தெரிவிக்கப்படுகிறது. "இந்தோ-பஸிஃபிக் பிராந்தியத்திற்கான புதிய உத்தியை நாம் அறிவித்திருந்தாலும் பிராந்தியத்தின் இரண்டு பெரிய பொருளாதாரங்களான இந்தியா மற்றும் சீனாவிலிருந்து நாம் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம்." என்று டொராண்டோசன் குறிப்பிட்டுள்ளது.

ஏராளமான இந்திய சீக்கியர்களும் கனடாவில் வாழ்கின்றனர். கனடாவின் உள்நாட்டு அரசியலில் சீக்கிய மக்கள் கணிசமான வாக்கைக் கொண்டுள்ளனர். உள்நாட்டு அரசியலின் காரணமாக ட்ரூடோ இந்தியாவிடமிருந்து விலகிச் செல்கிறார் என்று நம்பப்படுகிறது.



**கலாநிதி க.தவலிங்கம்**
**ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.**
**தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.**

**05**

"இந்தியாவின் பொருளாதாரம் கனடாவை விட இரண்டு மடங்கு பெரியது. இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடி. கனடாவைக் காட்டிலும் இது மிக அதிகம். எனவே கனடாவுக்குத் தான் இந்தியாவின் தேவை அதிகமாக உள்ளது." என்று டொராண்டோசன் தனது கட்டுரையில் கூறியுள்ளது.

இரு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திலும் பெரிய வித்தியாசம் உள்ளது. கனடாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 1.5 சதவிகிதமாக உள்ளது. அது 1.4 சதவிகிதமாக குறையவும் வாய்ப்புகள் உள்ளன. அதேநேரத்தில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 5.9 சத விகிதமாக உள்ளது. மேலும் அது அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பும் வெளியாகியுள்ளது.

இக்கொலை மற்றும் கனடா காலிஸ்தான் குறித்து சீக்கிய தலைவரும் அனைத்து இந்திய பயங்கரவாத தடுப்பு முன்னணி அமைப்பின் தலைவருமான எம்.எஸ். பிட்டா, "இந்தியாவை பிளவுபடுத்தும் எந்த நடவடிக்கைகளையும் சகித்துக்கொள்ள முடியாது. தனி காலிஸ்தான் என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. எங்கள் சமூகத்தை தவறாக காட்ட நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தனி காலிஸ்தான் கோரிக்கையை முறியடிக்க அனைத்து குருத்வாராக்களிலும் கூட்டம் கூட்டி பேச வேண்டும்." என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், கனடா மேற்கொண்டு வரும் விசாரணையின் இறுதிவரை வரை அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் பொறுத்திருந்து கவனிப்பதைத் தவிர வேறு நிலை எடுக்க வாய்ப்பில்லை எனவும் கனடாவின் உளவுத் துறைக்கு ஹர்தீப்சிங் நிஜ்ஜார் படுகொலை தொடர்பாகத் தெரிந்த தகவல்களை சில நட்பு நாடுகள் வழங்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்தப் படுகொலையில் இந்தியாவின் பங்கு உறுதிப்படுத்தப்பட்டால் மேற்குலகின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என சர்வதேச தரப்புகளில் கேள்விகள் எழுந்துள்ளமையும் இங்கு பேசுபொருளாக மாறியுள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலையில்...

யின் கட்டுமானப் பணிகளுக்கு மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கு கிழக்கு மாகாண ஆளுநரினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் கடந்த திங்கட்கிழமை முதல் குறித்த பகுதியில் கட்டுமானப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதனை தடைசெய்யக் கோரியும் திருகோணமலை மக்களினால் நேற்றைய தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவிருந்தது.

இதனைத் தொடர்ந்து, குறித்த பகுதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு நீதிமன்றத்தால் அனுமதி மறுக்கப்பட்டதாக பொலிஸாரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்ட நிலையில் பொதுமக்கள் கலைந்து சென்றுள்ளனர்.

அத்துடன் குறித்த இடத்திலிருந்து செய்திகளை சேகரிக்க முடியாது என ஊடகவியலாளர்களுக்கு பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (7)

## தமிழகத்தில்...

தலைவரும் தமிழக அமைச்சருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் இவ்வறிக்கையை தமிழக முதல்வரிடம் கையளித்துள்ளார். (7)

## லிட்ரோ...

மேலும், கடந்த மாத விலைத் திருத்தத்தின்படி 12.5 கிலோகிராம் எடை கொண்ட லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## வாகன விபத்தில்...

வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த கஜலகன் (வயது - 28) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-299)

## நீதிபதிக்கு...

இல்லை என்று எவரும் சொல்ல முடியாது. நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் நீதித்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் விசனம் தெரிவித்துள்ளதுடன், நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையிலும், எந்தவிதமான அபிவிருத்தி திட்டங்களுக்கும் நிதி ஒதுக்க முடியாத நிலையிலும் தற்போது நாடு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் மாறுபட்டாலும் தொடர்ச்சியாக தமிழினம் விடுதலையடையும் வரையும் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.(7)

## ஜனாதிபதித்...

தலுக்காக ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (7)

## கிளிநொச்சியில்...

மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் இந்த நாட்டில் இருக்க முடியாமல் வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர போன்றவர்களின் கொக்கரிப்பும் சட்டமா அதிபர் கொடுத்த மன உளைச்சலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை கடுமையாகப் பாதித்துள்ளது.

எனவே இவற்றைக் கண்டிப்பது நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இன்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து பொது அமைப்புக்களையும் பங்கேற்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேட்டுக் கொண்டுள்ளார். (7)

## ரணில்...

ஸ்ரீலங்கா பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சி என்பன இணைந்து கூட்டணியை அமைத்து ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்தி அவருக்கு ஆதரவளிக்க வேண்டும்.

அப்போதுதான் நாட்டை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி ரணில் முன்னெடுத்து வரும் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

ஜனாதிபதிப் பதவியில் மாற்றம் ஏற்பட்டால் அந்த திட்டங்கள் இடையில் நின்று போகும்.

இதனால் நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்படும் என்றும் இராஜாங்க அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர். (7)

## எரி...

அதன் புதிய விலை 420 ரூபாயாகும்.

ஒட்டோ டீசலின் விலை 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 351 ரூபாயாகும்.

சுப்பர் டீசலின் விலை 61 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 421 ரூபாயாகும்.

231 ரூபாயாக காணப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 11 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலையாக 242 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிபெட்கோவின் விலை திருத்தத்திற்கு அமைவாக, லங்கா IOC நிறுவனமும் சினோபெக் நிறுவனமும் எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளது. (7)

## மோ...

அண்மித்து ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் விடுதி உரிமையாளர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நுணாவில் பகுதியில் இருந்து சாவகச்சேரி நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் சாவகச்சேரியில் இருந்து நுணாவில் நோக்கிச் சென்ற பிக்கப் வாகனமும் ஒன்றோடு ஒன்று மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த நுணாவில் பகுதியில் உள்ள விடுதி ஒன்றின் உரிமையாளரான 35 வயது மதிக்கத்தக்க நபரே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (7-30)


நாகபூஷணி அதிர்ஷ்ட அலை

கனகலிங்கம் திலகவதி யாழ் மாவட்ட NLB விநியோகஸ்தர் மூலம் விநியோகிக்கப்பட்ட மகாஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பில் 30.09.2023 அன்று இடம் பெற்ற சீட்டிழுப்பில் முதல் பரிசாக 25,00000/= ரூபா வெல்லப்பட்டுள்ளது.
அந்த லொத்தர் ரிக்கற் மந்திகை விற்பனை முகவர் R.சுதர்சன் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். (17306)

தன நிதானய
திகதி - 2023.10.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1284
W 12 58 78 79 W
Double Chance 12918

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3496
சீட்டிழுப்பு திகதி 01.10.2023
T 48 49 64 77
T 56066

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 563
மேஷம் 22 26 34 41 மேஷம்

மஹஜன சம்பத
திகதி 2023/10/01
சீட்டிழுப்பு இலக்கம் 5254
S 8 3 2 0 0 7

மெகா பவர்
திகதி 01/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1602
M 26 03 04 11 21
72860

Lucky 7
திகதி 01.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0080
L7 இலக்கம் 2 1
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 5 9 3 4 9 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2228 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.01 தினம் ஞாயிற்றுக்கிழமை
F 01 09 43 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,835,420.40

சனிதா
திகதி 2023.10.01 வெற்றி வாரம் 4389 வர்ணம் இளஞ்சிவப்பு
31 36 44 48 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,206,084.00
ரூ.100,000/- 52596
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 383
சீட்டிழுப்பு திகதி 2023.10.01
வெற்றி இலக்கங்கள் 28 29 43
கபிலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,651,480/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3940 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.10.01 தினம் ஞாயிற்றுக்கிழமை
14 24 27 38
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,812,240/-
700978 307

கப்ருக
திகதி 01.10.2023 வெற்றி வாரம் 1404 வர்ணம் மஞ்சள்
Q 24 02 42 73 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 446,532,284.20
536102 506
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

அட கோடீபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2054
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.10.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,448,888/-
33 44 50 62 P
374569


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் தவணைக்கான மாதிரி வினாத்தாள்கள் விற்பனையாகின்றது...!

**தரம் 01 முதல் 05 வரையான மாணவர்களுக்கான,**

**யாழ் எக்ஸ்பிரஸ்**
YARL EXPRESS

விலை : 230.00

ஆரம்பக்கல்வியில் அனுபவம் வாய்ந்த, நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த, முன்னணி ஆசான்களின் தொகுப்பில், **02-ம் தவணை மாதிரி வினாத்தாள் தொகுப்பு விடைகளுடன்**

தரம் 05, புலமைப்பரிசில் தோற்றும் மாணவர்களுக்கு விசேட எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

விலை : 400.00

(C-7356)

எம்மிடம் இலங்கையின் அனைத்து வெளியீட்டாளர்களினதும் பாலர் முதல் பட்டதாரிகள் வரை தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள், கடந்தகால வினாத்தாள்கள், அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வெளியீடு : **Unilanka's Publication & Book Depot**
No. 326, Sea Street, Colombo 11. Tel : 011 4014438
Hotline : 077 7220324 / 077 6258778

ஆரம்பக்கல்வி மாணவர் விரும்பும் வண்ணம் தெளிவான அச்சமைப்பில் யாழ் எக்ஸ்பிரஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17302)

**076 825 7716** (ஆகாஸ்)

---

## பல்பொருள் அங்காடி முகாமையாளர் (Supermarket Manager) in Kilinochchi

- வயது எல்லை 35 - 45
- கணினி மற்றும் கணக்கு அனுபவம் தேவை.
- சம்பளம் 40,000 ரூபா தொடக்கம் 60,000 ரூபா வரை(பேசித் தீர்மானிக்கலாம்)
- கிளிநொச்சி மாவட்டம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : (C-7359)

**077 776 7984**

---

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 12 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17313)

---

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?

*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி

*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7358)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

**V2 TRAVELS - 0777-068-777**

---

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

**பஸ் சேவை**

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=



(17019)

**T.P:077 544 8503**

---

## கார் மாத வாடகைக்கு



**Altro, Renault**
கார்கள் மாத வாடகைக்கு உண்டு

(17312)

**077 332 2433**
யாழ்ப்பாணம்

---

*கல்வி நிலையம் ஒன்றுக்காக...*

## ஆசிரியர்கள் தேவை

இடம் : தெல்லிப்பளை

தரம் 01 - 11 வரை

பாடங்கள் : தமிழ், ஆங்கிலம், சுகாதாரம், குடியுரிமை, புவியியல், சுற்றாடல்

(17304)

**077 83 43 666**
**077 21 40 675**

---

# பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் **கல்யாண மாலை**

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

**www.kalyanamalai.lk**
இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
**கல்யாண மாலை**
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com

---

## CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584

(17311)

---

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.

(17282)

**077 728 6061**

---

## WORK IN UK
**WORK PERMITS**
கட்டுமான தொழிலாளர்கள்

➤ 5 YEARS WORK PERMIT
➤ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச் செல்லும் வாய்ப்பு
➤ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (permanent Resident)

- ✓ கட்டட தொழிலாளர்
- ✓ நீர்க்குலாய் பொருத்துனர்
- ✓ கம்பி கட்டுபவர்
- ✓ சட்டரிங் வேலை செய்பவர்
- ✓ தச்சுத்தொழிலாளர்
- ✓ எலெக்ரீசியன்

போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புகள்

(C-7358)

CIMS COLLEGE 0777-068-777

---

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்

DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528** (17311)

---

# பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்
- தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு

அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் (ஆண்கள்)

தகைமை : க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்

வயது - 24 இற்கு மேல்

**076 097 3121**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org